# நரகம்

# 2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# நரகம்

~~~~~

**(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, 'நரகம்' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)**

~~~~~

140. 'ஆனபடியினால் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களா யிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.' ஒரு மனிதன், தான் உலகத்தின் காரியங்களுக்கு மரித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் வந்து, பரிசுத்த

ஆவியானவரின் இசைவில் நடந்து, இந்தப் பாவமான உலகத்தின் வழிகளில் இல்லை என்பதை அறியும் போது, அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. அவன் நரகத்தின் முகத்தையும் நியாயத்தீர்ப்பையும் நோக்கிப் பார்த்து களிகூர முடியும், ஏனென்றால் அங்கே கிறிஸ்துவின் இரத்தமானது பரிகாரத்தை உண்டு பண்ணி, அவனுக்கும் நியாயத்தீர்ப்புக்கும் இடையே நின்று கொண்டிருக்கிறது. ஆமென். அங்கே தான் உங்கள் காரியம் இருக்கிறது.

**55-05-22 பேழை**

-------------

81. இப்பொழுது, உனக்கு ஒரு ஆத்துமா இருக்கின்றது. அப்பா, அம்மா உங்களுக்கும் அதே தான். ஆனால் நீங்கள் வைத்திருப்பீர்க ளானால் அதை நீங்கள் இழக்கப் போகிறீர்கள். அது சரி, நரகத்தின் சூனியக்காரக் கிழவிகள் அதை எடுத்துக்

கொள்ளுவார்கள். அவர்கள் எல்லோரும் அதன் மேல் குறியாயிருக்கிறார்கள். ஆனால் உனக்கு அதை அளித்த அவரிடம் நீங்கள் திருப்பி அளிப்பீர்களானால், அதை நித்திய ஜீவனுக்கென்று நீங்கள் காத்துக் கொள்வீர்கள். அல்லேலூயா ஆமென்! பிள்ளைகளே, என்னை பொறுத்துக் கொள்ளுங்கள். நான் பழைய சத்தமிடுகிற நபர் ஆவேன். நீங்கள் அதை நாம் எல்லாருமாக சேர்ந்து அதை கூறுவோமாக. (''நீ அதை வைத்துக் கொள்வாயானால் அதை இழந்து போவாய். அதை அளித்த அவரிடம் அதை அளிப்பாயானால் நீ அதை காத்துக் கொள்வாய்'' - என்று சகோ. பிரான்ஹாமும் சபையாரும் சேர்ந்து கூறுகின்றனர் - ஆசி) ஆமென். அதை அவரிடம் அளிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**56-05-13 மோசேயைக் குறித்த போதனை**

\- - - - - - - - - - - - -

75. ஆகையால் நீ உன்னுடைய கடைசி எச்சரிப்பை பெற்றுக் கொள்கிறாய் என்பதை ஞாபகம் கொள். நீ தப்பித்துக் கொள்ள நேரம் இருக்கும் பொழுதே, தப்பித்துக் கொள்.

இப்பொழுதே வா. அவர்கள் வந்து கொண்டிருக்கின்ற வரை நான் காத்துக் கொண்டிருக்கப் போகிறேன், ஏனென்றால் ஒருவேளை... ஒரு ஆத்துமா பத்தாயிரம் உலகங்கள் மதிப்புடையது. மக்கள் உறுதி கொள்கிற வரையில் நீங்கள் உங்கள் வேறுபாடுகளை உடைத்தெரிந்து,

தன்னல குணத்தையெல்லாம் வெளியே எடுத்துபரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வீர்களானால் இந்த காரியம் ஒரு பெரிய எழுப்புதலை அடைந்து இங்கு சுற்றி இருக்கும் எல்லா சபைகளை தொடும். நான் இதையே காண விரும்புகிறேன்; அதை விசுவாசிப்பதாகவும், விசுவாசிக்கப்

போவதாகவும் நீங்கள் உரிமை கோருகிறீர்கள். ஆனால் அது தன்னை அடையாளம் காண்பிக்க வரும்போது, நீங்கள் ஒருவரையொருவர் வேறு பிரித்து இழுத்துக் கொள்கிறீர்கள். நாம் ஏன் நம்முடைய இருதயங்களை தேவனுடைய வார்த்தையில் இணைத்து சத்தியத்தை விசுவாசிக்கக் கூடாது? அது தான். நீங்கள் மரித்துக் கொண்டே சரியாக லவோதிக்கேயாவினுள் சென்று கொண்டிருக்கிறீர்கள். அவர் என்ன வாக்குரைத்தாரோ சரியாக அதுதான் அந்த வழியாயிருக்கும்.

நீ இப்போது வரமாட்டாயா? இப்பொழுதுதான் அந்த நாள், ஏற்கப்பட்ட நேரம். பரிசுத்த ஆவியானவர் என்ன செய்யப் போகிறார் என்பதை கவனியுங்கள்.

**64-04-11 ஆவிக்குரிய நினைவிழப்பு**

\- - - - - - - - - - - - -

20. இப்பொழுது, கவனியுங்கள். ஆனால் உலகமோ, அவர்கள், ‘நல்லது, நான் சபையைச் சேர்ந்தவன். நான் அசெம்பிளிஸ் சபையைச் சேர்ந்தவன். நான் நான்குசதுர (Foursquare) சபையைச் சேர்ந்தவன். என்னால் செய்யக்கூடிய சிறந்த காரியம் அங்கே தான் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ளும் அல்லது அதை விட்டு விடும்’ என்று கூறுகிறார்கள். நீங்கள் ஒரு தட்டு சூப்பை எடுத்து, அதில் ஒரு சிலந்தி கிடந்தால், அதைப் புசிக்கவே மாட்டீர்கள். அதை உங்களுக்குக் கொடுத்த நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுப்பீர்கள். அது உண்மை. அது சரியே. நீங்கள் அதைச் செய்வீர்கள். நீங்கள் எதற்காகவும் அதைப் புசிக்கவே மாட்டீர்கள். ஆனால் அப்படியே எந்தவிதமான ஒரு பழைய மதக்கோட்பாட்டையும் உங்கள் கழுத்துக்கு கீழாக உங்கள் ஆத்துமாவில் கடந்து செல்ல அனுமதிக்கிறீர்கள். அவை

எல்லாவற்றிற்கும் பிறகு, எப்படியும் அந்த சரீரம் மரிக்கத்தான் போகிறது. அது உண்மை.

இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் ஒரு பொருட்காட்சி சாலையில் இருந்தேன், அவர்கள் ஐம்பது பவுண்டுகள் எடையுள்ள - சரியாகச் சொன்னால் 150

பவுண்டுகள் எடையுள்ள ஒரு மனிதனைக் குறித்த பகுப்பாய்வை (analysis) வைத்திருந்தனர். அவனுடைய சரீரம் 84 காசுகள் (cents) பெறுமானமுள்ள ரசாயனங்களாகத் தான் இருந்தது. அது சற்றேறக்குறைய ஒரு கோழிக்கூண்டின் மேல் தெளித்து, அதை வெள்ளையடிக்கப் போதுமான அளவு கால்சியத்தையும் மற்றும் ஒவ்வொன்றையும் தான் கொண்டிருந்தது. அவனுடைய முழு எடையும் 84 காசுகள் (cents) விலைமதிப்புள்ளதாகவே இருந்தது. அங்கே இரண்டு பையன்கள் நின்று கொண்டு, ஒருவன் மற்றவனிடம்,

‘ஜான், நமக்கு அதிக விலைமதிப்பு இல்லை, அப்படித்தானே? என்றான்.

மற்றவன், ‘அது சரிதான்; நாம் அதிக விலைமதிப் புள்ளவர்கள் என்று நான் நம்பவில்லை’ என்றான். நூற்றைம்பது பவுண்டுகளுக்கு விலை மதிப்பு 84 காசுகள் (cents) தான். இப்பொழுது, துவக்க முதலே நீங்கள் பெரியவர்களல்ல, அப்படித்தானே? ஆனால் அந்த 84 காசுகளை (cents) நீங்கள் அக்கறை எடுத்து கவனித்துக் கொள்வதில் நிச்சயமுடையவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் அதன் மேல் ஒரு சிறு விலங்கின் மென்மயிரினால் செய்யப்பட்ட 500 டாலர்கள் விலைமதிப்புள்ள கோட்டை அணிந்து கொண்டு, உங்கள் மூக்கை நிமிர்த்திக் கொள்கிறீர்கள். மழை பெய்தால், அது உங்களை மூழ்கடித்து விடும். அந்த 84 காசுகளை (cents)

கவனிப்பதில் நீங்கள் உறுதியாய் இருக்கிறீர்கள். ஆம், ஐயா.

21.ஆனால் பத்தாயிரம் உலகங்கள் விலைமதிப்புள்ள ஒரு ஆத்துமாவை நீங்கள் அங்கே உள்ளே பெற்றிருக்கி றீர்கள், அதில் எதையும் திணிப்பதற்கு நீங்கள் பிசாசை அனுமதித்து, அதைக் குறித்து தேவனுடைய சரியான வழியை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, அதை நீதி என்றும், பக்தி என்றும் அழைத்துக் கொள்கிறீர்கள். அது உண்மை. உங்கள் ஆத்துமா பத்தாயிரம் உலகங்கள் விலைமதிப்புடையது. உங்களுடைய சரீரமோ 84 காசுகள் (cents) மாத்திரமே விலைமதிப்புடையது. நீங்கள் அதை சுற்றிலும் இழுத்துக் கொண்டு சென்று, அதைக் கவனிப்பதிலேயே உறுதியா யிருக்கிறீர்கள். ஓ, நீங்கள் அதை சவரம் பண்ணி, அதைச் சரியாக சிங்காரித்து, ஆனால் என்னே, அதற்கு அருமையாக

உடையுடுத்திக் கொள்கிறீர்கள். ஆனால் அந்த ஆத்துமாவுக்கு வஸ்திரம் தரிக்க நீங்கள் உறுதியற்றவர்களாய், இஸ்டமான எதையும் அதன் வழியாக இழுக்க அனுமதிக்கிறீர்கள்.

## 61-02-17 மிருகத்தின் முத்திரையம் தேவனுடைய முத்திடையும் #2

---------------

224. இப்பொழுது இயேசு என்ன கூறினார் என்பதைப் பாருங்கள். இப்பொழுது நாம் அதை வார்த்தைக்கு கொண்டு செல்வோம். நாம் நிறைய மூடத்தனமானவைகளை நிறைய உடையவர்களாயிருக்கிறோம். ஆனால் நாம் அதை வார்த்தைக்கு கொண்டு செல்வோம். இயேசு, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிற வனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு

நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" என்றார். தேவன் அவ்வண்ணமாய் கூறினார். அது அதை என்றென்றைக்குமாய் தீர்க்கிறது. "எந்த மனிதனுமே'', "என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். பிதாவானவர் எனக்கு கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்". ஒருவரும் இழக்கப்படவில்லை. "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன்" என்று இயேசு கூறினார்.

225. ஒரு ஆத்துமா பத்தாயிரம் உலகங்களுக்கு பெறுமானமுள்ளதாய் இருக்கும்பொழுது, இந்த பீடத்தின் மேலே நோக்கிப் பார்க்க, ஓ, எவ்வளவு அதிசயமாயிருக்கிறது. அவர்கள் ஒரு சபையை சேர்ந்துகொள்ள ஒரு போதும் வரவில்லை. அவர்கள் கிறிஸ்துவின்

சரீரத்தின் ஒரு அங்கமாய் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் வருகிறார்கள். இங்கே அவர்கள் நன்றி கூறுதலையும், ஜெபத்தையும் ஏறெடுக்கவே வருகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் மேலும் கீழுமாக இந்த பீடத்தில் இறங்கி, ஒவ்வொரு இருதயத்தையும், இன்றிரவு ஒரு சமாதானமுள்ள, இனிமையான, தாழ்மையான ஆவியினால் அபிஷேகித்து, நிரப்பி, அது கனிகளையும், கிறிஸ்துவின் நீதியையும், அவர்களுடைய சரீரத்தில் சுவாசம் இருக்குமட்டும் கொண்டு வரும்படியாயும், மகிமையில் வீட்டிற்கு போகச் செய்யும்படி நான் ஜெபிக்கிறேன்.

## 57-01-20E தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்

-------------

என் அன்பான நண்பரே, நீங்கள் இந்த சரீரம் மற்றும் இந்த ஜீவியத்தின் கடைசி மூச்சு காற்றிடத்தில் வரும்போது, அந்த

மனிதனால் உண்டாக்கப்பட்ட கோட்பாடுகள் நிலை நிற்கமாட்டாது என்பதை நீங்கள் கண்டுக் கொள்வீர்கள். அந்த காரியங்களைக் கொண்டு ஜீவிப்பது நல்லதுதான், ஆனால் அவைகளைக் கொண்டு நீங்கள் மரிக்க முடியாது...

நான் யூகிக்கிறேன், என்னுடைய இந்த வயதில், இந்த ஊழியத்தில், என் வயதை உடையவர்கள் - மரித்துக் கொண்டிருக்கின்ற அநேக ஜனங்களின் அருகில் நான் அனேகமாக, இருந்திருக்கிறேன், ஏனென்றால் மரித்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக நான் மிகவும் அதிகமாக அழைக்கப்பட்டிருக்கிறேன்.

13. சில நாட்களுக்கு முன்னர், எங்களுடைய பட்டணத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட வாலிப ஸ்திரீ பரிசுத்தா வியின் ஞானஸ்நானத்தை பெற்றிருந்தாள். அவள் கூடாரத் திற்கு வருவாள். பட்டணத்திலுள்ள வேறொரு வாலிபப்

பெண் மிகவும் பிரபலமானவளாய் இருந்தாள். அவள் (இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தையும், பாதுகாப்பையும் மறுதலித்த, நவீன மாதிரியான மதக்குழுவை சேர்ந்தவர்களாய் இருந் தாள். மேலும் எங்களை, ஒரு வழக்கத்திற்கு மாறான மத நம்பிக்கை உடையவர்கள் என்றும் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள் என்றும் கூறினர். ஏனெனில் நாங்கள் கிறிஸ்து வினுடைய இரட்சிக்கும் கிருபையில் விசுவாசம் கொண்டிருந் தோம்.

ஒரு பரிசுத்த உருளையாய் இருப்பதற்கு அதுவே அவசியமாய் இருக்குமானால், பின்பு நான் அவர்களில் ஒருவனாயிருக்கிறேன். (காரணம்) நான் இரத்தத்தில் விசுவாசம் வைத்திருக்கிறேன்.

இந்த வாலிப ஸ்திரீ நடனங்களுக்கும் கேளிக்கை களுக்கும் போனாள், ஆனால் அவள் சபையில் ஞாயிறு பள்ளி

ஆசிரியையாய் இருந்தாள். சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தை மறுதலித்து, அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது என்று கூறினது. அது 1900 வருடங்களுக்கு முன்பே உலர்ந்து போய்விட்டது என்று மேய்ப்பர் சொன்னார்: ஒரு சமூக சுவிசேஷம். போகப் போக இந்த அழகான தோற்றம் கொண்ட சிறு பெண் சில வாலிப பையன்களுடன் வெளியே சென்றாள்.

இந்த மற்ற சிறு பெண்ணோ மேலே கூடாரத்திற்கு வருவாள். அவள் பழைமை நாகரீகமான வஸ்திரங்களை உடுத்தினாள். அவள் தன்னுடைய மயிரை அப்படியே எவ்வளவு முடியுமோ அவ்வளவு இருக்கமாக சீவி, நீங்கள் அழைக்கிற இந்த ஒப்பனை அலங்காரம் எதுவும் அவளுடைய முகத்தில் கொண்டிருக்காமல் அல்லது அவர்கள் உடுத்துகிற அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் அவள் உடுத் தாமல் தெருவில் இறங்கி செல்வது

வழக்கம். அவள் தெருவில் இறங்கி போவாள்.

ஆம், அது உண்மையே; நாம் அதற்கு விரோதமாக போதிக்கிறோம். சுவிசேஷத்திற்கு முக்கிய கவனத்தைக் கொடுக்கும்படிக்கு தேவன் போதகர்களுக்கு உதவி புரிவாராக. சீமாட்டிகளே கவனியுங்கள், ஒரு மனிதனை சந்திக்கும்படி தனக்குத்தானே வர்ணம் தீட்டிக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ எப்பொழுதாவது வேதத்தில் இருப்பாளானால், அது ஒரு ஸ்திரீ மாத்திமே, அதுதான் யேசபேல் ; தேவன் அவளை நாய்களுக்கு உணவாக்கினார். எனவே அவர்கள் வர்ணம் தீட்டிக்கொண்டிருப்பதை நீங்கள் காணும்போது, "எப்படி இருக்கிறீர்கள், செல்வி நாய்க் கறியே?” என்று கூறுங்கள். அது மிகவும் சரியே: தேவன் அவளை நாய்களுக்கு இரை யாக்கினார். நீங்கள்

அவளைப் போல இருக்க விரும்புவ தில்லை .

எவ்வளவு அழகாக இருக்க வேண்டுமோ அவ்வளவு அழகாக தேவன் உங்களுடைய வழிகளிலே உங்களை அழகுள்ளவர்களாக்குவார். ஆனால் இன்னும் நம்முடைய பரிசுத்த சபையானது அப்படிப்பட்டதான காரியங்களை விட்டுக் கொடுக்கிறது. அது உண்மை என்று நீங்கள் அறிந்திருக்கி றீர்கள். நீங்கள் மறுபடியும் உங்களை வெட்டி சரிப்படுத்தும் அந்த பழைய வரிசையில் திரும்பி வந்து, சுவிசேஷத்திற்கு திரும்பி வருவது நல்லது.

14. இப்பொழுது கவனியுங்கள். இந்த வாலிபப்பெண், அவள் அப்படியே தன் ஒவ்வொரு வழியிலும் செய்துக் கொண்டிருந்தாள், நடனங்களுக்கும், விருந்துகளுக்கும் மற்றவைகளுக்கும் வெளியே சென்றாள். அவள் வியாதியால் தாக்கப்பட்டாள். காரியம் என்னவென்று

அவள் புரிந்துக் கொள்ளவில்லை. ஆனால் மருத்துவர் அவளிடம் வந்தபோது, அவள் ஒரு பால்வினை நோயை கொண்டிருந்தாள். அவளுடைய நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. கொஞ்சம் முயற்சித்துப் பார்த்தார்கள், ஆனால் அது கிரியை செய்யவில்லை.

இந்நிலையில் அவள் நேராக பரலோகத்திற்கு போவாள் என்றும், ஏனெனில் அவள் ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியையாய் இருந்தாள் என்றும் மேய்ப்பர் அவளிடம் கூறினார். எனவே அவர்கள் அனைவரும் அவள் போவதை யும், கர்த்தருடைய தூதர்கள் அவளை அழைத்துச் செல்ல வருவதையும் காண அறைக்குள் கூடிவந்திருந்தனர்.

அதற்கு சிறிது நேரத்திற்கு முன்பாக நான் அப்படியே தெருவில் கடந்து சென்றேன். மேய்ப்பர் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்திருந்தார், அழகான பெரிய வீடு,

அருமையான ஜனங்கள். அவர் அப்பொழுதுதான் அறையை விட்டு வெளியே வந்திருந்தார். ஞாயிறு பள்ளி வகுப்பார் அனை வரும் அவள் பரலோகத்திற்கு போவதை காணும்படி உள்ளே பாடல்களை பாடிக் கொண்ருந்தனர். மேய்ப்பர் புகை பிடிக்கும்படி நடந்து வெளியே கூடத்திற்கு வந்தார். மரணம் அப்பெண்ணை தாக்கியபோது, அவள் மரண பீதியில் அலறத் தொடங்கினாள், அவள், "அந்த பெண் எங்கே?" என்றாள்.

அவர்கள், "எந்தப் பெண்?" என்றனர். அவள், "உன்னுடைய வகுப்பார் எல்லாரும் இங்கே உள்ளனரே" என்றாள்.

அவளோ, "நான் அவர்களை குறித்து பேசிக் கொண்டிருக்கவில்லை. என்னுடைய ஆத்துமாவை குறித்து என்னிடம் வழக்கமாக பேசுகிற, அவளுடைய பெயரைச் சொல்லி, அங்கே

மேலேயுள்ள அந்த கூடாரத்தைச் சேர்ந்த அந்த பெண்ணைக் குறித்து தான் நான் பேசிக் கொண் டிருக்கிறேன்" என்றாள். "போய் அவளை அழைத்து வாருங்கள்" என்று சொன்னாள்.

15. அவர்கள் மேய்ப்பரிடம் சென்றனர், அவர் உள்ளே ஓடி வந்தார். அவர், "இப்பொழுது, தேனே கவனி, நாங்கள் மருத்துவரை அழைக்கிறோம். அவர் உனக்கு ஊசி போடுவார். நீ சிறிது பதற்றமடைந்துள்ளாய்" என்றார்.

அவள், "நான் பதற்றமடையவில்லை . நீ மனிதரை வஞ்சிக்கிறவன். நான் இழக்கப்பட்டு நரகத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன், ஏனெனில் நீ எனக்கு அவ்வாறு தான் போதித்தாய்" என்றாள். அந்த பெண் இழக்கப் பட்டவளாய், எது சரியானதென்று அவளிடம் கூற முயற் சித்துக் கொண்டிருந்த மற்ற பெண்ணிற்காக

அலறிக் கொண்டே மரித்து, தேவனைச் சந்திக்கச் சென்று விட்டாள்.

பார் சகோதரனே, இந்த வாழ்க்கை பயணத்தின் முடிவிற்கு நீ வரும்போது, நீ தேவனுக்கு முன்பாக ஒரு பரிசுத்தமான, சுத்தமான ஒரு ஜீவியம் ஜீவித்திருக்க வேண்டுமென்று நீ விரும்புவாய். அதை ஞாபகத்தில் வைத்திருப்பதில் நிச்சயமாயிருங்கள்.

இப்பொழுது, உங்களுடைய சபையைக் குறித்து - நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்களாய் இருந்தாலும், தேவனுக்கு அது காரியமல்ல. உங்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதுதான் காரியம். அது சரியே. நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்கள் என்று தேவன் உங்களிடம் கேட்கப் போவதில்லை; உங்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது

என்பதைத்தான் தேவன் பார்க்கப் போகிறார்.

**50-08-27A ஊதாரி**

-------------

51. ஆனால், சகோதரனே, பிசாசு அவருடைய விலையேறப் பெற்ற ஆத்துமாவை நரகத்தின் பாதாளக் குழிக்குக் கொண்டு போனான். அங்கே வாசல்கள் திறவுண்டன. அவைகளை அவர் ஜெயித்து மூன்றாம் நாள் வெளியே வந்தார்! ஆமென்!! "அவனுடைய வித்து பகைஞனுடைய வாசலைச் சுதந்தரித்துக் கொள்ளும்''. அவர் மரணத்தை ஜெயித்தார்! நரகத்தை ஜெயித்தார்! உயிர்த்தெழுந்த அந்த காலையிலே அவர் கல்லறையை ஜெயித்தார் ! நம்மை நேசிப்பவரின் மூலமாய் இப்போது, நாம் ஜெயங்கொண்டவர்களாய் நிற்கிறோம் !

**59-11-08 பகைஞனுடைய வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுதல்**

-------------

211. கல்வியும் முடிவுக்கு வந்துள்ளது. சிறுவர் புரியும் குற்றம் (Juvenile delinquency) முடிவுக்கு வந்துள்ளது. பிள்ளைகளுக்கு இனி நம்பிக்கையேயில்லை. அவர்களுக்கு பைத்தியம் பிடித்து விட்டது. நீங்கள் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்க முடியாது. அவன் பள்ளியை விட்டு வெளி வரும்போது, உள்ளே சென்ற போது இருந்ததைக் காட்டிலும் இரட்டிப்பாக நரகத்தின் பிள்ளையாகி விடுகிறான். உபாத்தியாயர் ஏதாவது கூறினால் அவர் கொல்லப்படுகிறார். அவர்கள் ஒரு சிறு கூட்டமாக சேர்ந்து கொண்டு உபாத்தியாயர் வெளியே வரும்போது அவரைக் கட்டிப் போட்டு சுட்டுக் கொன்று விடுகின்றனர். இப்படியாக நாம் இரண்டாயிரம் உபாத்தியாயர்களை

இழந்து விட்டோம். ஒ, ஒரு நிமிடம் பொறுங்கள், கடந்த ஆண்டில் அது இருபதாயிரம் உபாத்தியாயர்கள் என்ற நினைக்கிறேன். நான் உபாத்தியாயர்களை குறை கூற மாட்டேன். நானும் அவர்களுடைய நிலையில் இருந்தால், மாணவர்களுக்கு அறிவுரை எதுவும் கூற மாட்டேன். எங்கு பார்த்தாலும் "பிள்ளைகளுக்கு கல்லூரி கல்வி அளியுங்கள்" என்னும் விளம்பரங்களைக் காண்கிறோம். அவாகளுக்கு அது அவசியம் தான், . ஆனால் பிசாசு அவர்களைப் பிடித்துக் கொண்டு விட்டான். ஹாலோவின் இரவன்று ஒரு வாசலைப் பிடுங்கிக் கொண்டு போய் தொங்க விடுவது, அல்லது விவசாயி ஒருவனின் குதிரை வண்டியை சாலையில் கொண்டு போய் விட்டு விடுவது. இப்படிப்பட்ட செயல்கள் எல்லாம் மாணவர்களுக்கு சாதாரணம் தான். ஆனால் இப்பொழுது அவர்கள்

பைத்தியம் பிடித்த செயல்களைப் புரிகின்றனர். அவர்கள் சுட்டு, கொலை செய்து. விஷம் கொடுத்து, இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகின்றனர். எனக்கு அடுத்த சந்ததி இப்படி செய்கின்றது.

**60-02-21 தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை அடையாளம் கண்டு கொண்டு அதன்படி நடத்தல்**

-----------------

28. அவர் சாத்தானின் வல்லமைகளை முறித்துப்போட்டார். அவர் நரகத்தின் சிறைக் கதவுகளைத் திறந்தார். மரணம் எவ்விதமாயிருக்குமோ என்று பயந்து இவ்வுலகமாகிய சிறையில் அடைப்பட்டிருந்த ஒவ்வொரு மனிதனையும், அவர் கல்வாரியில் சிறைக் கதவுகளைத் திறந்து விடுவித்தார். நீங்கள் இனி ஒருபோதும் பாவத்தினால் அடிமைப்பட வேண்டிய அவசியமில்லை. உங்கள் அவயவங்களை நீங்கள் இனி

ஒருபோதும் பாவத்துக்கும், குடி பழக்கத்துக்கும், புகை பிடித்தலுக்கும், சூதாட்டத்துக்கும், பொய் சொல்லுதலுக்கும் ஒப்புக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

நீங்கள் உத்தமமும், நீதியும், நேர்மையுமுள்ளவர்களாக இருக்கலாம். சாத்தான் ஒன்றுமே செய்ய முடியாது. ஏனெனில் நீங்கள் ஜீவக் கம்பியை இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறீர்கள். அது காலங்கள் தோறும் உள்ள கன்மலையில் நங்கூரமிடப்பட்டுள்ளது. அதிலிருந்து எதுவுமே உங்களை அசைக்க முடியாது. எந்த புயல் காற்றும் அதிலிருந்த உங்களை அசைக்க முடியாது. எதுவுமே, மரணம்கூட, கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமுடியாது.

**60-09-25 கல்வாரியில் அந்த நாள்**

\- - - - - - - - - - - - -

347. சகோதரனே, நரகத்தின் மேலிருந்த மூடியானது நீக்கப்பட்டு விட்டது. அது உண்மை. எல்லாப் பக்கத்திலிருந்தும் பிசாசின் வல்லமை ஓடைகளாக கொட்டப்படுகின்றது. அது தேசங்களை ஜெயித்து விட்டது. நம்முடைய அரசியல் அழுகிபோகும் அளவிற்கு அதை ஜெயித்து விட்டது. நம்முடைய சபைகள் ஸ்தாபனங்கள் என்ற ஒன்றுமில்லாத அமைப்பாக மாறும் அளவிற்கு ஜெயிக்கப்பட்டு விட்டது.

"நீர் கிறிஸ்தவனா?" என்று கேட்டால் "நான் ஒரு மெத்தோடிஸ்டு" என்கிறான். "நீங்கள் கிறிஸ்தவரா?" என்று கேட்டால் "நாங்கள் பெந்தெகோஸ்தேயினர்" என்று கூறுகிறார்கள்.

348. நான் அன்று ஒரு நாள் கூறினேன். இந்த அமைப்புகள் ஒரு பன்றி, ஒரு குதிரை மற்றும் அப்படிப் போல அமைந் திருக்கின்றன. அத்தகைய

அழைப்புகளோடு நமக்கு ஒன்றுமில்லை. நீங்கள் மனந்திரும்பி பரிசுத்த ஆவியினால் நிறையப்படும் வரை நீங்கள் கிறிஸ்தவர்களல்ல. ஆவியானவருக்கு முற்றிலும் ஒப்புக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். அவ்விதம் ஆவி யானவருக்கு ஒப்புக்கொடுக்கவில்லையென்றால் நீங்கள் மறுபடியும் பிறந்தவர்களல்ல, பரிசுத்த ஆவியானவர் உங்களில் இல்லை. நீங்கள் ஒருவேளை அந்நிய பாஷை பேசி, நடுக்கமுற்று குதித்து, ஓடி பலவிதமான காரியங்களையெல்லாம் செய்யலாம்....

349. பவுல், "நான் விசுவாசத்தினால் மலைகளை பெயர்க்கக் கூடும், வியாதிகளை சொஸ்தமாக்க முடியும், வேதாகமத்தின் எல்லா இரகிசயங்களையும் அறியக் கூடும். வேத பள்ளிக்குச் சென்று எல்லாவிதமான காரியங்களையும் கற்க முடியும். இருந்தாலும் நான் ஒன்றுமில்லையென்றான்' அல்லேலூயா!

## 61-11-19 பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

------------------

102 இப்பொழுது நாம் ஆதியாகமத்துக்கு திரும்பிச் செல்வோம். அதுவே தொடக்கம். ஆதியாகமாம் என்றால் "தொடக்கம்" என்று பொருள். தம்முடைய குடும்பம் வார்த்தையில் நிலைத்திருந்து வார்த்தையைக் கொண்டு வாழ்ந்த வரைக்கும் தேவன் அவர்களுக்கு நித்திய ஜீவனை அளித்திருந்தார் என்பதை நாம் கண்டறிகிறோம். ஆனால் அவர்கள் அதை மீறின போது, வாக்குத்தத்தங்களின் சங்கிலியில் ஒரு இணைப்பு அறுந்த போது மரணம் அவர்களை ஆட்கொண்டது. அதுவும் கூட தேவனுடைய வாக்குத்தத்தமாயிருந்தது.

103 அது ஒரு சங்கிலி. அதைக் கொண்டே நீங்கள் நரகத்தின்மேல் தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அது

ஒன்று மாத்திரமே உங்களை நித்திய ஜீவனுக்கு கொண்டு செல்லும். ஆனால் விசுவாசி பாவனை விசுவாசியாகி இந்த வார்த்தைக்கு முரணான ஒரு வார்த்தையும் கொண்டு வாழத் தலைப்பட்டால், அவன் தேவனுடன் கொண்டுள்ள தன்னுடைய ஐக்கியத்தை துண்டித்துப் போகிறான். ஒரு இணைப்பு அறுந்துவிட்டதே! இந்த வார்த்தையின் பேரில் நீங்கள் கொண்டுள்ள விசுவாசம் ஒரு சங்கிலியைப் போன்றது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். ஒரு சங்கிலி அதன் மிகவும் பலவீனமான இணைப்பில் மிகவும் பலமுள்ளதாயிருக்கிறது. அது உண்மை. ஏனெனில் அவ்வளவு பளுவைத் தான் அது தாங்கும். வார்த்தையில் ஏதாவதொன்று உங்களுக்கு குழப்பம் உண்டாக்கினால், நீங்கள் வேறு விதமாக கேள்விப்பட்டிருந்தால், அவர்கள், "இதுவா? ஓ, அது கடந்து சென்ற அப்போஸ்தலர்களின் நாட்களுக்குரியது"

என்கின்றனர். ஆனால் வேதமோ இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்றுரைக்கிறது. எனவே அது பலவீனமாக இருக்க விட்டு விடாதீர்கள்! அதை அரணிட்டு இறுகப்பற்றிக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையை அதில் சுற்றிக் கொள்ளுங்கள். ஏனெனில் அது ஒன்று மாத்திரமே உங்களை நரகத்தின் அக்கினிக்கு மேலாக கொண்டு செல்ல முடியும். அது உண்மை.

104 முதல் குடும்பமாகிய ஆதாமும் ஏவாளும் இந்த சங்கிலியை அறுத்து போது கவனியுங்கள். அவர்கள் ஒரு முழு வாக்கியத்தை மீறவில்லை. மூன்று வார்த்தைகளை மீறவில்லை. ஒரே ஒரு வார்த்தையை மாத்திரமே மீறினர். மனிதன் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் நரகத்தின் மேல் தொங்கிக் கொண்டிருப்பான். அங்குதான் மனிதன் நித்தியமாக

அடையும் ஸ்தலம் தீர்மானிக்கப்படுகிறது. ஏன், அவன் சங்கிலியைப் பிடித்து தொங்கிக் கொண்டிருப்பான், அல்லது அவன் ஒரு கோட்பாட்டை பிடித்து தொங்கிக் கொண்டிருப்பான். இல்லையென்றால் சங்கிலியில் கோட்பாடு கலந்திருந்தால், அங்குதான் பலவீனமான இணைப்பு உள்ளது. நீங்கள் விழுந்து விடுவீர்கள். அங்குதான் ஆதாமுக்கு, ஏவாளுக்கும் பலவீனமான இணைப்பு இருந்தது. அந்த பலவீனமான இணைப்பு "நிச்சயமாக," அவன் சொன்னான், "தேவன். ஆனால் நிச்சயமாக தேவன் அதை சொன்னாரே! தேவன் அதை கூறியிருப்பாரானால், அந்த அர்த்தத்தில் தான் அவர் கூறினார். மேலும், "நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்!" என்று அவர் கூறின தம்முடைய வார்த்தையை கூட காத்துக் கொள்கிறார். நீங்கள் கலப்படமற்ற தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறெதையாகிலும் உங்கள் ஆத்துமாவில்

போடும் அந்த நாளில் தேவனை விட்டு பிரிக்கப்படுகிறீர்கள்.

105 இது மிகவும் கடினமானது, ஆனால் கூர்ந்து கவனியுங்கள். இப்பொழுது கவனியுங்கள். ஒரு வார்த்தை, வேதாகமத்தின் துவக்கத்தில் ஒரு வார்த்தை. "ஒரே ஒரு வார்த்தை மனிதனை நித்திய ஜீவன் சங்கிலியிலிருந்து பிரித்தது" என்று தேவன் கூறினார்.

## 64-12-12 அறுப்பின் நேரம்

---------------

178 பாவம், தேவனுடைய பிரமாணத்தை மீறினதன் காரணமாக, ஒரு வார்த்தையை முறித்ததன் காரணமாக, ஒரு நொடியில் தோன்றினது. இன்றிரவு, என் சகோதரரே, உங்கள் ஆத்துமா சங்கிலியால் நரகத்தின் மேல் தொங்கவிடப்பட்டிருக்கிறது. அந்த சங்கிலி வேத சாஸ்திர பள்ளியின் போதகமல்ல,

அந்த சங்கிலி நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏதோ ஒரு ஸ்தாபனமோ அல்லது அதன் கோட்பாடோ அல்ல. அந்த சங்கிலி தேவனுடைய வார்த்தை! மனிதகுலம் வாழ்வதற்கென்று இயேசு தமது வார்த்தையை அதற்கு கொடுத்தார். ஏவாள் அதன் ஒரு சிறு இணைப்பை மாத்திரமே முறித்துப் போட்டாள்... எந்த ஒரு சங்கிலியும் அதன் மிகவும் பலவீனமான இணைப்பைக் காட்டிலும் பலமுள்ளதல்ல. நீங்கள் அதிலிருந்து ஒரு வார்த்தையை எடுத்துப் போடும்போது.. அது வேதாகமத்தின் முதல் புத்தகம்.

இயேசு வேதாகமத்தின் நடுவில் வந்து, “மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்றார். அது வேதாகமத்தின் நடுபாகம்.

வேதாகமத்தின் கடைசி புத்தகத்திலும், "ஒருவன் இதிலிருந்து ஒரு வார்த்தை எடுத்துப் போட்டால் (ஒரு வார்த்தைக்கு தவறான அர்த்தம் உரைத்தால்), அவன் பங்கை ஜீவ புஸ்தகத்திலிருந்து எடுத்துப்போடுவேன்" என்றார். நீங்கள் தேவனுடைய வார்த்தையில் தொங்கிக் கொண்டு நரகத்தைக் கடந்து கொண்டிருக்கிறீர்கள். கர்த்தர் உரைக்கிறதாவது என்பதைத் தவிர வேறுயாரும் வேறொன்றையும் உங்களுக்குள் திணிக்க அனுமதிக்க வேண்டாம்.

## 64-12-21 அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?

---------------

90 எந்தக் காரியமும் இந்த சபைக்கு தடங்கலாயிருக்க ஒரு போதும் அனுமதிக்க வேண்டாம். எந்தக் காரியமாவது தடங்கல் செய்தால், அப்பொழுது நீங்கள்

குற்றவாளியாயிருக்கிறீர்கள், நீங்கள் ஒவ்வொருவரும் குற்றவாளியாயிருக்கிறீர்கள். நீங்கள் இருக்கின்ற உங்களுடைய பல்வேறுபட்ட சபைகளில், உங்களுடைய சபையில் ஏதோ ஒரு காரியம் தவறாக நடைபெற்றுக்கொண்டிருந்தால், அப்பொழுது நீங்கள் குற்றவாளியாயிருக்கிறீர்கள், ஏனென்றால் நீங்கள் அந்த சபையின் கண்காணியாயிருக்கிறீர்கள். அது போதகரைப் பொறுத்ததாயிருக்கவில்லை . அது உதவிக்காரரின் குழுவினைப் பொறுத்தது மாத்திரமல்ல. அது உங்களை, தனிப்பட்ட உங்கள் ஒவ்வொருவரையும் பொறுத்ததாயுள்ளது. எனவே நீங்கள் அந்த சகோதரனிடத்திற்குச் சென்று, உங்களால் அவரை ஒப்புரவாக்க முடிகிறதா என்று பாருங்கள். அப்படி ஒப்புரவாக்க முடியவில்லையென்றால், அதன்பின்னர் உங்களோடு இரண்டு அல்லது மூன்று

பேரை அழைத்துச் சென்று பேசிப்பாருங்கள், அதுவும் முடியவில்லையென்றால் அப்பொழுது திரும்பி வந்து விடுங்கள். அவர் அதற்கு செவிகொடுக்கவில்லையென்றால், அதை சபைக்கு கூறிவிடுங்கள். அப்பொழுது அவர் தேவனுடைய இராஜ்ஜியத்திலிருந்து நீக்கப்படுகிறார். தேவன், "நீங்கள் அவரை அங்கே நீக்கிவிடுவீர்களேயானால், நான் அவரை இங்கே நீக்கிவிடுவேன், நீங்கள் இந்த ஒழுங்கினூடாக சென்றிருப்பீர்களேயானால், நலமாயிருக்கும்" என்றார். அதன்பின்னர் அவர் அழிவிற்காக.. அவனுடைய மாம்சத்தின் அழிவுக்காக பிசாசை அவனண்டை அவிழ்த்து விடுவார். அதன்பின்னர் அவன் திரும்பி வந்து விடுவான். அது உண்மையே. அந்த விதமாகவே அவனைத் திரும்பி வரச் செய்கிறார். அவன் ஒரு தேவனுடைய பிள்ளையாயிருந்தால், அவன் திரும்பி

வந்துவிடுவான். அவன் தேவனுடையப் பிள்ளையாயில்லையென்றால், ஏன் ஏன், அவன் அப்படியே தொடர்ந்து சென்று கொண்டிருப்பான், அப்பொழுது பிசாசு அவனை தன்னுடைய நித்திய ஸ்தலத்திற்கு அனுப்பிவிடுவான்.

## 57-09-15E எபிரெயர், ஏழாம் அதிகாரம் #1

--------------

138. அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மன தில்லாதிருக்கும் காலம் வரும். ஜனங்களுக்கு ஒன்று அவசியமா யுள்ளது... தங்கள் முதுகில் தட்டிக் கொடுத்து தங்கள் விருப்பப் படியே வாழ்க்கை நடத்தலாம் என்று கூறுவது பெந்தெகொஸ்தே யினருக்குத் தேவையாயுள்ளது. அவர்கள் அதிவேகமாக பியானோவை வாசித்து, மேலும் கீழும் குதித்து நடனமாட விரும்பு கின்றனர். ஸ்திரீகளும், தங்கள் விருப்பப்படியே நடக்க விரும்புகின்றனர்.

பிரஸ்பிடேரியன், மெதோடிஸ்டு, லூத்தரன், பெந்தெகொஸ்தே போன்ற ஸ்தாபனங்கள் அனைத்திலும் உத்தம மானவர்கள் இருக்கின்றனர். ஆனால் அந்த ஸ்தாபன முறைமைகள் அவர்களை இறுகக் கட்டியுள்ளதால், சபை புத்தகங்களில் தங்கள் பெயர்கள் எழுதப்பட்டிருந்தால் அவர்கள் பரலோகம் சென்று விடுவார்களென்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். பூமியிலுள்ள புத்தகத்தில் உங்கள் பெயர் எழுதப்பட்டிருந்தால், அதனால் தேவனுக்கு ஒன்றுமில்லை (சகோ. பிரன்ஹாம் விரல்களை சொடுக்கு கிறார் - ஆசி). உங்கள் பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் எழுதப்பட்டிருக்க வேண்டும். அது உண்மை .

139. ஆனால் அவர்களோ அப்படித்தான் விரும்புகின்றனர். அப்படிப்பட்ட போதகர்கள் தான் அவர்களுக்குத் தேவை. அவர்களுக்கு வேறொன்றும் அவசியமில்லை. இந்த கடைசி நாட்களில் தேவன் அசைத்திருக்கும் போது... வேதத்தில் கூறப் பட்டுள்ள தேவனுடைய ஒவ்வொரு வரமும், இயேசு கிறிஸ்து வாக்களித்துள்ள ஒவ்வொரு வரமும், ஒவ்வொரு அடையாளமும், ஒவ்வொரு முடிவுகால அடையாளமும், எனக்குத் தெரிந்த வரைக்கும், இந்த தேசத்திற்கு முன்பாக வெளிப்பட்டு, இந்த தேசம் அசைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்த தேசம் விரைவாக நரகத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. நாம் எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும், அவர்கள் அங்குதான் சென்று கொண்டிருக்கின்றனர்.

**63-06-23E அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு**

-------------------

221. சகோதரனே, சகோதரியே உன்னால் அதை முடியவே முடியாது. ஒரு போதும் உன்னுடைய இருதயத்திலுள்ள அந்த பரிசுத்த அழைப்பை, ஒரு சபையை சேர்ந்து கொள்வதனாலோ, ஒரு சமய கோட்பாட்டை, திரும்ப திரும்ப சொல்லுவதனாலோ, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தை சார்ந்தவனாக இருப்பதனாலோ, அமுத்தி போட பிரயாசிக்காதே.

222. அதை திருப்தியாக்க கூடியது ஒன்றே ஒன்று உண்டு. அது இயேசு கிறிஸ்துவாகிய நபரே. "மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது போல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது. என் ஆத்துமா ஜீவனுள்ள தேவன்மேல் தாகமாயிருக்கிறது'' உனக்குள்ளாக ஏதோ ஒன்று இருக்கின்றது. அது தேவனுடைய

அசைவை காண வாஞ்சிக்கிறது. உன்னுடைய ஆத்துமா அதன் பேரில் தாகமாய் இருக்கிறது. அதைப் பற்றி ஒன்றையும் தடை செய்து போடாதே.

223. போதகர் உன்னிடத்தில், ''நீ அவருடைய கையை பிடித்து குலுக்க வேண்டும், சபையை சேர்ந்து கொள் அல்லது ஒரு ஸ்தாபனத்தை சார்ந்து கொள்'', என்று சொல்ல இடங் கொடாதே. அந்த பரிசுத்த தாகத்தை கொன்று போடாதே. அது உன்னை எச்சரிக்கின்றது. ஒரு நாள் வரும். அப்பொழுது நீ உன் பாதையின் முடிவிற்கு வந்திருப்பாய்.

224. நாம் வந்த பட்டணத்தில் இருந்த ஒரு சிறு ஸ்திரியை போன்று. ஒரு அருமையான சிறு பெண் அங்கே ஒரு சபைக்கு போனாள். அவள் தெரு வழியாய் வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு நீண்ட கூந்தல் இருந்தது. அவளுடைய தலைமயிர், ஒரு

உரிக்கப்பட்ட வெங்காயத்தை போன்று பின்னாக தொங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய முகம் எந்த விதமான மேக் அப்பும் (Make-up) செய்யாதது போல் காணப்பட்டது. இந்த பெண் அவளை பார்த்து உங்களுக்கு மட்டும் அந்த வழக்குதலை போதகர் மட்டும் இல்லாதிருந்திருப்பாரானால் (என்னை குறித்து அவள் பேசுகிறாள்) நீ பார்ப்பதற்கு கௌரவமாயிருப்பவள் போலிருப்பாய். ஆனால் உன்னை இப்பொழுது பார்த்தால் ஏதோ பண்டைய கால பொருள் கடையிலிருந்து கொண்டு வந்ததுபோல் இருக்கின்றாய்'' என்று பரிகசித்தாள். அவள் காணும் போதெல்லாம் அவள் அந்த விதமாக சொல்லி அதிக வெறுப்புண்டாக்குவாள். எங்களுடைய போதகர் மிக பரந்த மனப்பான்மை உள்ளவர். எங்களை அறிவார். நீ ஏன் அப்படி செய்கிறாய்? நீ எந்த விதமாக உடுத்துகிறாயோ, சிந்திக்கின்றாயோ,

அதனால் ஒன்றும் மில்லை என்றாள்! அதில் காரியம் உண்டு! தேவனுடைய வேதம் சொல்லுகிறது, அதில் உண்டு என்று, நாம் எல்லா வார்த்தையினாலும் ஜீவிக்கிறோம்.

225. இந்த சிறு பெண் அதை குறித்து சிறிதேனும் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து சென்றாள். இப்பொழுது அவள் ஒரு தேவ ஊழியளாய் இருக்கிறாள்.

226. ஆக இந்த வாலிப ஸ்திரி ஏதோ சமுதாய வியாதிகண்டு மரித்து போனாள். என்னுடைய நண்பன் ஒருவர், அவள் மரித்துக் கொண்டிருக்கும் போது சுகந்தவர்க்க நீரை அவளுடைய சரீரத் திற்குள் செலுத்திக் கொண்டிருந்தான். அவன் சொன்னான், அவள் மரித்த பிறகும் கூட அந்த சுகந்தவர்க்க வாசனையை அவனால் முகர முடிந்தது என்று. அவளுடைய பக்கவாட்டில் துவாரம் ஒன்று தின்று கொண்டிருந்தது. சமுதாய வியாதி.

அவர்களுக்கு அது தெரியாது, அவளுடைய பெற்றோர்களுக்கும் அது தெரியாது, அவளுக்கு என்ன கோளாது என்று. ஆனால் அவள் மரிப்பதற்கு முந்தி.

227. அவள் ஞாயிறு பாடசாலையில் உபாத்தியாய் இருந்தாள். அவளுடைய ஞாயிறு பள்ளி பிள்ளைகளின் கூட்டம், அவள் பரலோகம் போகும் போது தேவ தூதர்கள் வந்து அவளைத் தூக்கிக் கொண்டு போவதை கானும்படியாய் வந்திருந்தார்கள். அவளுடைய போதகர் ஆஸ்பத்திரி கூடத்தில் சிகரெட்டை புகைத் துக்கொண்டு அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தார். அவள் மரிக்கும் போது அவர்களெல்லாரும் பாட இருக்கிறார்கள், உங்களுக்குத் தெரியுமா. அவள் மரிக்க வேண்டும் என்று அவர் களெல்லாம் அறிந்திருந்தார்கள். வைத்தியர் சொல்லி விட்டார் அவள் மரிக்கின்றாள் என்று. ஆதலால் அவர்களெல்லாரும் தூதர் கள் வந்து அவளை தூக்கிக் கொண்டு

போவதை காணும்படி அவர் களெல்லாரும் இருந்தார்கள்.

228. சடிதியாக அவள் உண்மையான நிலையை உணர ஆரம் பித்தாள். அவள் ஒரு உண்மையான சபை அங்கத்தினளாயிருந் தாள். அவள் ஒரு ஓய்வு நாள் பாடசாலை உபாத்தியாயினி, ஒரு அருமையான பெரிய ஸ்தாபனத்தை சேர்ந்தவள். அவள் போராட ஆரம்பித்த போது மரணம் அவளைத் தாக்கிற்று. அவளுடைய கண்கள் சற்று வெளியே வந்தது. அவள் அப்பொழுது நான் இழந்து போனேன்! நான் இழந்து போனேன்! போதகரை அழை யுங்கள்!'' என்றாள்.

229. அவர் சிகரெட்டை கீழே எறிந்து விட்டு உள்ளே நுழைந்து, ''இங்கே, இங்கே! இங்கே இங்கே உனக்கு ஹிபோ (Hypo) கொடுக்கும்படி நாங்கள் வைத்தியரை கொண்டு வருவோம்!'' என்றார்.

230. “எனக்கு. எந்த ஹிபோ (Hypo)வும் வேண்டாம்.'' மனுஷரை வஞ்சிக்கிறவனே! நான் மரித்துக் கொண்டிருக்கிறேன். நான் நரகத்திற்கு போகிறேன். நான் இழந்து போனேன், ஏனென்றால் நீ சத்தியத்தை எனக்கு சொல்ல தவறிப் போனாய். போய் அந்த சிறு குட்யூஸ் (Gooduse) பெண்ணை அழைத்துக் கொண்டு வாருங்கள், சீக்கிரமாய் என்னிடத்தில் கொண்டு வாருங் கள். அவள் தான் சரியாய் இருக்கிறாள்! என்றாள்.

231. ஒரு முறை நீங்கள் உண்மையான நிலையை சந்திக்கும் மட்டாய் காத்திருங்கள். அந்த பரிசுத்த தாகத்தை நிறுத்திபோட பிரயாசிக்காதே. நீ அதை ஏதோ நவீன, கற்ற, இரட்டை குழாய் துப்பாக்கியால் பிய்த்து போடாதே”, இன்றிரவு உன்னை “நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.

என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்! என்று எச்சரிக்கின்ற பரிசுத் தாவியின் எச்சரிப்பிற்கு செவி கொடு, அவரே வார்த்தையாயிருக் கிறார்.

**65-09-19 தாகம்**

----------------

360. உங்களில் எத்தனை பேர் உயிர்ப்பிக்கும் வல்லமையைப் பெற்றுக் கொண்டீர்கள்? (சபையார் "ஆமென்' என்று கூறுகின்றனர் - ஆசி ) இப்பொழுது நீங்கள் உங்களுடைய கைகளை ஒருவர் மற்றொருவர் மேல் வையுங்கள். உயிர்ப்பிக்கும் வல்லமை உங்களுக்குள் இருந்தால்....

361. உங்களுக்குள் உயிர்ப்பிக்கும் வல்லமை கிரியை செய்வதை உங்களுடைய அவிசுவாசம் மாத்திரமே தடை செய்ய முடியும். ஒரு ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தை தொட்டு

சொஸ்தமடைந்தாள். ஒரு ரோம போர்ச் சேவகன் அவருடைய முகத்தில் துப்பி நரகத்திற்கு போனான். புரிந்து கொண்டீர்களா? அது உங்களுடைய விசுவாசத்தைப் பொறுத்தது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை விசு வாசிக்கிறீர்களா?

**65-04-18M இது சூரிய உதயம்**

---------------

157. அப்படியானால் எப்பொழுது இயேசுவானவர் இருதயத்திற்குள் ளாக வருகிறார்? அநேக ஜனங்கள் நரகத்திற்கு செல்ல விரும்பாத காரணத்தினால் அவரை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் இயேசு வானவர் இருதயத்திற்குள்ளாக வருகின்ற போது, அவர் ஆண்டவராக இருக்க விரும்புகிறார். வெறுமனே ஒரு இரட்சகராக அல்ல, ஆனால் ஆண்டவராகவும்கூட இருக்க விரும்புகிறார். ஆண்டவர் என்றால்,

''ஆளுநந்தன்மை'' என்பதாகும். அவர் உடைமையை மாற்றிப் பெறுவதற்கு உள்ளே வருகிறார்.

## 65-02-06 வாசல்களுக்குள்ளே வாசல்கள்

------------------

நீங்கள் என்னை பயித்தியக்காரன் என்று நினைக்கலாம். ஒருவேளை அப்படியே இருக்கட்டும் (நான் ஏற்கனவே கூறியபடி) ஆனால் ஏதோ ஒன்று என்னில் இருக்கின்ற காரணத்தினால், அதை என்னால் நிறுத்த முடியவில்லை. என்னுடைய சொந்த தெரிந்து கொள்ளுதலினால் அது வரவில்லை. அது தேவனாயிருக்கின்றது! அவர் அதை உறுதிப்படுத்துகின்றார், அதுதான் சத்தியமாக்க, அது சதத்தியம் என்பதை நிருபிக்கின்றார். லூத்தர், வெஸ்லி, பெந்தேகோஸ்தேயினர், பாப்டிஸ்டு அல்லது வேறு யாரோடும், அவர்களை விரோதிக்கத்தக்கதான காரியம்

என்னிடத்தில் எதுவும் இல்லை. ஸ்தாபன அமைப்புகளுக்கு எதிராகவே நான் அறை கூவுகிறேன். ஏனெனில் தேவனுடைய வார்த்தையானது அவைகளுக்கு எதிராக இருக்கின்றது. எந்த ஒரு தனி மனிதன் மேலும் எனக்கு விரோத மனப்பான்மையில்லை! இன்று இங்கு அமர்ந்திருக்கும் போதகர்களையும், வேதசாஸ்திரிகளையும் பாருங்கள். அவர்கள் ஸ்தாபன அமைப்புகளுக்கு செவி கொடுத்திருப்பார்களேயானால் இன்று இங்கு இருக்கமாட்டார்கள். ஆனால் தேவ வார்த்தையைக் குறித்ததான பொதுவான துணிவு அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் வெளியே வந்து அதை எற்றுக் கொண்டுள்ளனர்! அல்லேலூயா! – என்பதற்கு நம் தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று அர்த்தம். நான் கூறினது உங்களை புண்படுத்தாது என நினைக்கிறேன். ஆமென்! என்பதற்கு அப்படியே

ஆகக்கடவது என்று அர்த்தம். நான் அதை சத்தியம் என்று அறிந்து விசுவாசிக்கிறேன் என்றாவது ஒருநாள் இது சத்தியம்தான் என்று நீங்கள் உணருவீர்கள் - ஒருவேளை அப்பொழுது காலமானது மிகவும் கடந்துவிட்டிருக்கும்.

இப்பொழுது கவனியுங்கள், கவனியுங்கள்.

63. காலத்தின் முடிவில் மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்தினாள் என்று வேதம் கூறுகிறது. அவருடைய மனைவியாவதற்கு அவள் எவ்விதம் ஆயத்தப்படுத்தினாள்?எத்தகைய வஸ்திரத்தை அவள் தரித்திருக்கிறாள்? அவருடைய வார்த்தையென்னும் நீதியின் வஸ்திரத்தினால் அவள் தன்னை உடுத்தியிருக்கிறாள். நான் தரிசனத்தில் பார்த்ததும் அவ்வாறே இருந்தது. பாருங்கள்?

கவனியுங்கள், நான் முடிக்கும் முன்பு இந்த ஒரு காரியத்தை கூற விரும்புகிறேன். இதை கூறும்படியாக என்னை நடத்தினது அதுதான். இப்பொழுது இது “கர்த்தர் சொல்லுகிறதாவது” ஒரு மனிதன் தன் சொந்த எண்ணத்தினால் அவ்விதம் கூறுவானென்றால் அவன் ஒரு மாய்மாலக்காரனும், நரகத்திற்கு பாத்திரனுமாயிருக்கிறான். அது உண்மை. இவ்விதமாக ஒரு கூட்டம் நல்ல ஜனங்களை அவன் கூட்டி அவர்களை ஏமாற்றுவானென்றால், மாமிச கோலம் எடுத்த பிசாசு என்று அவனை அழைக்கலாம். தேவன் ஒருபோதும் அவனை கனப்படுத்த மாட்டார். ஒரு பொய்யையோ அல்லது ஒரு பிசாசையோ தேவன் கனப்படுத்துவார் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? ஒரு போதும் இல்லை. செய்தியானது அவர்களுடைய தலைகளுக்கு மேலாக செல்கின்றது. அவர்கள் அதை பெற்றுக்

கெள்ளவில்லையென்றால், தேவன் தம்முடைய தெரிந்து கொண்டவர்களை வெளியே இழுத்துவிடுகிறார்.

**65-01-24 பிரசவ வேதனை**

-----------------

21. இன்றைக்கு நீங்கள் அதைக் குறித்து மிகவும் அதிகமாகவே கேள்விப்படுகிறீர்கள். தேவன் ஒரு நல்ல தேவனா கவே இருக்கிறார். அவர் ஒரு நல்ல தேவனாக இருக்கிறார். ஆனால் அவர் ஒரு பரிசுத்தத்தின் தேவனாயும், பாவத்தை கண்டுகொள்ளாமல் விடமுடியாத ஒரு தேவனாயுமிருக்கிறார். ஏனென்றால் அதற்கான அபாரதம் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அவருடைய அடிப்படை ஆதாரங்களின் பேரில் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் ஒரு கோபாக்கினையின் தேவனாய், ஒரு உக்கிர கோபாக்கினையின் தேவனாயிருக்கிறார் என்பது

நினைவிருக்கட்டும். நீங்கள் ஒரு கோபாக்கினையின் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும். வெறுமெனே நன்மையும் இரக்கமுமான ஒரு தேவனுக்கு முன்பாக அல்ல, இன்றிரவு அவர் உங்களுடைய இரட்சகராக இருக்கிறார். ஆனால் அந்நாளில் அவர் உங்களுடைய நியாயாதிபதியாயிருப்பார்.

22. ஆகையால் நண்பனே, நீ ஒரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடாதபடி நிச்சயமுடையவனாயிரு. அது - அது ....... அது பலனளிக்காது. வெறுமனே ஒழுங்கற்ற விதமாய் அதனண்டைச் செல்லாதே. நிச்சயமுடையவனாயிரு, இரட்டிப்பான நிச்சயமுடைய வனாயிரு, ஏனென்றால் உனக்கு மற்றொரு தருணம் கிடைக்கிற தில்லை. நீ இங்கே பூமியின் மேல் இருக்கும்போது,. இதுவே உன்னுடைய தருணமாய் இருக்கிறது.

23. ஐசுவரியவானையும், லாசருவையும் நினைவில் கொள்ளுங்கள். அவனுக்கும் இவனுக்கும் இடையே எந்த மனிதனும் எப்போதும் கடந்திராத அல்லது எப்போதும் கடக்க முடியாதபடியான ஒரு பெரும் பிளவு இருந்தது. புரிகின்றதா? நீங்கள் மரிக்கும்பொழுது, அதுவே இதற்கு தீர்வாகிறது. அந்த இடங்களிலிருந்து அவர்கள் உங்களுக்கு ஜெபிக்கிறார்கள் என்று ஜனங்கள் உரிமை கோருவதை நான் அறிவேன். ஆனால் நீங்கள் அதை ஒருபோதும் நம்பவேண்டாம். அது தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாயிருக்கிறது. புரிகின்றதா? "மரமானது எப்பக்கமாக சாய்கிறதோ, சாய்கிறவிதமாகவே, அந்த விதமாகவே அது விழுகிறது". இயேசுதாமே, “ஒரு பெரும் பிளவு இருந்தது என்றும், ஒரு மனிதன் மரித்து, நரகத்திற்கு சென்றுவிடும்போது, அவன் (ஒருபோதும்) பரலோகத்திற்கு வரவே முடியாது. எந்த

மனிதனுமே அதை எப்போதுமே கடந்ததில்லை யென்றும், ஒருபோதும் அதை கடக்கவே முடியாது" என்றும் கூறினார், என்னைப் பொறுத்தமட்டில் அதுவே இதற்கு தீர்வாகிறது. இயேசு அது இவ்வாறு இருந்தது என்று கூறிவிட்டபோது அதைக் குறித்த யாவும் அவ்வளவுதான்.

24. ஆகையால் சற்று நினைவிருக்கட்டும். இப்பொழுது இது உங்களுடைய தருணமாயிருக்கிறது. இன்றிரவு இது உங்களுடைய கடைசி தருணமாயிருக்கலாம்.

**64-03-21E அடையாளத்தின் சத்தம்**

-----------------

162. அதன் காரணமாகத்தான் ஒரு அழகுள்ள ஸ்திரீ சாத்தானின் கண்ணிக்கு இலக்காகிறாள். அத்தகைய ஒருவளை அவன் தன் கைக்குள் போட்டுக் கொள்ளுவானானால், தேசத்திலுள்ள மது

நிலையங்கள் மனிதர்களை நரகத்திற்கு ஆயத்தம் செய்வதை விட அதிகமான மனிதர்களை ஒரு அழகான பெண்ணின் மூலம் அவன் நரகத்திற்கு அனுப்பிவிடுவான். அது உண்மை .. அதேவிதமாக வசிகரமான ஒரு வாலிபனும் பிசாசின் கையில் அமைவானானால் அநேக பெண்களை பிசாசு நரகத்திற்கு அனுப்பிவிடுவான். ஆம் ஐயா.

163. சாத்தான் அழகில் வசிக்கிறான் என்பதை கவனியுங்கள். ஆதியிலே அவன் செய்ய முயற்சித்த காரியம் என்ன? - மிகாவே லின் இராஜ்ஜியத்தைக் காட்டிலும் ஒரு அழகான இராஜ்ஜியத்தை உண்டாக்க அவன் நினைத்து, வட திசையாக திரும்பி, மூன்றில் இரண்டு பங்கு தேவ தூதர்களை தனக்கென்று வசியப்படுத்திக் கொண்டான்.

**63-11-24E மூவகை விசுவாசிகள்**

----------------

353. என் ஆண்டவருக்கு ஒரு கல்வாரி போதாதா? பின்னை ஏன் இப்படி செய்கிறீர்கள்? அவரை நேசிக்க வேண்டிய நீங்கள், இது அவருடைய வார்த்தை என்று அறிந்திருக்கிற நீங்கள்; "இதி லிருந்து ஒன்றை எடுத்துப் போட்டால், அல்லது இதனுடன் ஒன் றைக் கூட்டினால்" என்று வெளிப்படுத்தல் 22ம் அதிகாரம் உரைத்திருப்பதை படித்துள்ள நீங்கள்; ஏன் இப்படி செய்கிறீர் கள்? அவருக்கு ஒரு கல்வாரி போதாதா?

354. அவருக்காக நான் வாதாடுகிறேன். அவருக்கு நான் வழக்கறிஞர். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு உங்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறேன். உங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளுங்கள். இல்லையேல் நீங்கள் நரகத்திற்கு செல்வீர்கள். உங்கள் ஸ்தாபனங்கள் தவிடு பொடியாகிவிடும். நீதிபதியின் முன்னிலையில் உங்கள் பேரில் நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

உண்மை. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கிற நீங்கள் - மாய்மாலங்கள். அதை என்ன வென்று அழைக்கிறீர்கள்? ஒரு கல்வாரி போதாதா?

**63-07-07M குற்றச்சாட்டு**

----------------

131. சில நாட்களுக்கு முன்பு லாஸ் ஏஞ்சலிஸில் நான் கேம்ப் மைதானத்துக்குச் சென்றிருந்தேன், நான் காரில் கேம்ப் மைதானத்துக்கு சென்று கொண்டிருந்தபோது, மிகவும் அழகான ஒரு பெண் செல்வதைக் கண்டேன். "அவள் ஒரு காட்சியில் (Show) பங்கு கொள்வதற்காக செல்லவேண்டும்'' என்று நினைத்தேன், அவளுடைய முன்பாகத்தில் ஆறு அல்லது எட்டு அங்குலம் அகலமுள்ள ஒரு துணி மாத்திரம் தொங்கிக் கொண்டிருந்தது. அதனுடன் மூன்று அல்லது நாலு அங்குலம் அகலமுள்ள உடையின் ஓரஜாலர் (fringe)

சேர்க்கப்பட்டிருந்தது. அவள் மேல் பாகத்தில் சிறு புள்ளிகள். அங்கிருந்த துணியை உங்கள் கைக்குள் அடக்கி விடலாம். அவள் மாடுமேய்ப்பவனின் (Cow boy) தொப்பி ஒன்றையும், காலணிகளையும் அணிந்திருந்தாள், மிகவும் கவர்ச்சியுள்ளவள்... எந்த ஒரு வாலிபனும் அவள் இடுப்பை ஆட்டி நடந்து செல்லும் விதத்தை கண்டு, காரை சடுதியாக பிரேக்' போட்டு நிறுத்தி, அவளைக் காணாமல் செல்லவே முடியாது.

132. நான் கேம்ப் மைதானத்தை அடைந்தேன். நான் திரும்பிச் சென்று அவளை நிறுத்தி, “வாலிபப் பெண்ணே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உன்னிடம் பேச விரும்புகிறேன். நீ அழகில் சிறந்தவள் என்பதில் சந்தேகமில்லை. உன் உடலமைப்பு மிகவும் கவர்ச்சியாயிருந்தாலும்... வாலிபர் காரை

சடுதியாக 'பிரேக்' போட்டு நிறுத்தும் சத்தத்தை நீ கேட்க விரும்புகிறாய். ஆனால் உன்னை அவ்விதம் செய்யத் தூண்டும் ஆவி உன்னைப் பிசாசின் நரகத்திற்கு கொண்டு சென்று, அங்கு நீண்ட காலம் நீ வேதனைப்பட வேண்டும் என்பதை நீ உணருகிறாயா? உன் அழகான உடல் கட்டும், கன்னங்களும், சிகப்பு இதழ்களும் இன்னும் ஆறே மாத காலத்தில் பூமிக்கடியில் புழுக்களால் நிறைந்து, அதனுள் இருக்கும் உன் ஆத்துமா பிசாசினால் மிகுந்த வேதனைக்குள்ளாக்கும் என்று உனக்குத் தெரியுமா?" என்று கூறலாமென்று நினைத்தேன்.

133. ஆனால் ஏதோ ஒன்று என்னை தடுத்து நிறுத்தினது. "அப்படி செய்தால், உன்னை சிறையில் தள்ளி விடுவார்கள்" என்று தேவன் கூறுவது போலிருந்தது. பார்த்தீர்களா? அப்பொழுது பில்லி எனக்கு சைகை காட்டி, 'நம்பிடுவாய்' என்னும்

பாடலை அவர்கள் பாடுவதைக் கேட்க என்னை அழைத்தான்.

134. ஓ, என்னே! ஜனங்கள் அப்படிப்பட்டவைகளில் எவ்வாறு மயங்கி விட முடியும்? அவர்கள் தேவனுடைய வார்த்தையை அவமதிப்பதால் தான்.

**63-06-23E அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு**

--------------

185. ஓர் அருமையான மனிதனாயிருந்து வந்த ஓர் இளம் ஆசாரியன் யவீரு என்பவனைக் காண முடிகிறது. அவன் இயேசுவை விசுவாசித்தான், ஆனால் அவன் அதைத் தன்னுடையக் கூட்டாளிகளினிமித்தமாக அப்படியே வெளிக்காட்டாமல் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது.

186. இன்றைக்கும் அதுபோன்று எத்தனையோ இரகசிய விசுவாசிகள் இருக்கின்றனர். அவர்களைத்

தங்களுடையச் சபையைவிட்டு வெளியேற்றிவிடுவார்கள் என்று அவர்கள் பயப்படுகின்றனர். பார்த்தீர்களா? கோழைகள், தேவன் அதை உபயோகப்படுத்த முடியாது. தேவனோ அங்கே பின்னிடாமல் உறுதியாய் நிற்கக்கூடிய ஒரு மனிதனையே விரும்புகிறார். அதற்கு மரணமே நேரிட்டாலும், அதற்கு முத்திரைப்போடு. "சரீரத்தை அழிக்கக் கூடியவனுக்கு நீங்கள் பயப்படாமல் சரீரத்தை அழித்து, ஆத்துமாவை நரகத்திற்கு அனுப்பக்கூடியவருக்கே பயப்படுங்கள்”.

**61-12-24 ஐயன்மீர், நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம்**

---------------

309. இன்று மக்கள் மிகவும் போற்றி பேணிக்கொள்கிற பெரிய அருமையான கட்டிடங்களும், பணம் அனைத்தும், பாவமும், அழகுமான ஆண்களும்,

பெண்களும் அவர்கள் எப்படியெல்லாமோ தங்கள் சரீரத்தை அரங்கரித்துக் கொண்டாலும், அதின் மூலம் ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்புவதற்குரிய பிசாசின் கண்ணியாக அவர்கள் இருந்தாலும், எல்லாம் அழிந்து கெட்டுப் போகும் தோல் புழுக்கள் அவர்களை தின்றுபோடும். முதலாவதாக தோல் புழுக்கள்.... அவர்கள் யாவரும் எரிமலை நெருப்பினுள் போய், எரிமலை சாம்பலாக எரிந்து அழிந்து ஒன்றுமில்லாமற் போவார்கள்.

310. ஆனால் வரப்போகும் காலைகளில் ஒன்றில், நண்பரே, வரவிருக்கும் காலைகளில் ஒன்றில், எல்லாம் முடிந்த பிறகு, பூமியானது மீண்டும் செழிக்கும். வெளிகளில் பசும்புல் முளைத்து, ரோஜாவின் நற்கந்தம் ஜீவ விருட்சத்தின் பூத்துக் குலுங்குவதோடு இணைந்து மணம் வீசும், ஒரு காலையில் கிறிஸ்து திரும்பி வருவார். பெரிய

பறவைகளும், புறாக்களும் மரங்களில் உட்கார்ந்து, கூவென்று அப்போழுது கத்தும், அதன்பிறகு இனிமேல் மரணமும் அலறுதலும் இருக்காது. கிறிஸ்துவும் அவரால் மீட்கப்பட்டவர் களும் பூமிக்குத் திரும்பி வருவார்கள். வயது சென்றவர்களாக அல்ல, என்றென்றும் இளவயதினராக, சாவாமை உள்ளவராக. அவருடைய சாயலைத்தரித்து நிற்போம். சூரிய சந்திர ரைக் காட்டி லும் மிஞ்சி நாம் பிரகாசித்துக் கொண்டிருப்போம்.

அவ்வழகான நகருக்கு போக நான் ஆயத்தமாயுள்ளேன் அதை எனதாண்டவர் தமக்குரியவர்க்காக ஆயத்தம்

செய்துள்ளார் அங்கே சதா காலங்களும் மீட்கப்பட்ட அனைவரும் வெள்ளை சிங்காசனத்தை சுற்றி நின்று மகிமை

எனப்பாடுவர் சில வேளைகளில் நான் பரலோக வீட்டை பற்றியும்

காணப்போகும் மகிமையைப்பற்றியும் உள்ள நினைவால்

வாடுகிறேன், என் இரட்சகரை அப்பொன்னான நகரத்தில் நான் காணப்

போகையில் என்னே ஒரு மகிழ்ச்சியாக அது இருக்கும்

311. ஓ, நான் அவரைக் காண எவ்வளவாய் ஏங்குகிறேன் நான் அவரைக் காண விரும்புகிறேன். நான் அந்த அழகிய நகருக்குப் போக ஆயத்தமாயுள்ளேன். யோவான் அந்நகரத்தை பத்மூ தீவில் இருக்கும்போது கண்டான்; அவன் காண்கையில் அந்நகரம் தன் கணவனுக்காக அலங்கரிக்கப்பட்ட ஒரு மணவாட்டியைப்போல் இறங்கி வந்தது. அதன் மகிமையை ஒரு நாளில் நான் விரும்பு கிறேன்.

நான் அவரைக் கண்டு அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க

விரும்புகிறேன். அங்கே அவரும் இரட்சிப்பின் காருண்யத்தைக் குறித்து

என்றென்றும் பாடுவேன் மகிமையின் தெருக்களில் என்னுடைய சத்தத்தை நான்

உயர்த்திப் பாடுவேன் கவலைகள் யாவும் ஒழிந்தது, இறுதியில் என்றென்றும்

மகிழ்ந்திருக்க வீடு வந்து சேர்ந்தேன்.

**61-01-01 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #2**

---------------

50. ஒரு ஒழுக்கக் கேடான பெண்மணியானவள், சாத்தான் வசத்தில் இருக்கும் வேறெந்த ஒன்றைக் காட்டிலும் மிகவும் வலுவான கண்ணியாகும். மது அருந்தும் தவரணைகளைவிட அவள் மோசமானவள். நாட்டிலுள்ள மது அருந்தும் தவரணைகளைவிட அவள் அதிகமான ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்பிட முடியும். அது சரிதான்.

51. “குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக் கிறாள்'' என்று பூமியிலேயே மிகவும் ஞானமுள்ள மனுஷன் கூறினான். ஒரு நல்ல ஸ்திரீயை ஒரு மனிதன் கனம் பண்ணவேண்டும். ஆனால் பொல்லாத ஸ்திரீயோ அவனது இரத்தத்தில் தண்ணீராக இருக்கிறாள். அவனது இரத்தம் என்றால், அவனது ஜீவனையே குறிக்கும். ஒரு மனிதனுக்கு ஏதாவது மிக நல்லதை ஒரு துணைக்குப் பதிலாக கொடுக்கக்கூடியது ஒன்று தேவ னுக்கு இருக்கிறதெனில், அதை அவர் கொடுத்திடுவார். ஆனால் ஒரு ஸ்திரீதான் தேவன் ஒரு மனிதனுக்கு சிறந்த துணையாகக் கொடுக்க முடியும். ஆனால் அவர்கள் மாறுபடும் பொழுது...

52. ஏதேன் தோட்டத்தில் பெண்ணைத்தான் சாத்தான் தனது கருவியாக இருக்கும்படி தெரிந்துகொண்டான். அவன் மனிதனை எடுக்கவில்லை, ஸ்திரீயையே எடுத்துக்

கொண்டான். அவன் ஏன் ஆதாமிடம் போய் அவனுக்கு தனது பாசத்தை காண்பிக்கவில்லை? அவன் ஸ்திரீயினிடத்தில் வந்து அவளிடத்தில் தான் தனது அக்கறையுள்ள பாசத்தைக் காட்டுகிறான், ஏனெனில் அவளைத்தான் அவன் தெரிந்து கொண்டான். தேவன் மனிதனை எடுத்துக் கொண்டார். சாத்தானோ மனுஷியை எடுத்துக்கொண்டான்.

**60-12-11E லவோதிக்கேயா சபையின் காலம்**

-------------

45. ஏன், அவர்கள் ஏதோவொன்றைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அதற்காக காத்திருக்கின்றனர், அதை அவர்களுக்குக் கொடுக்க சபையானது தவறி விட்டது. அவர்கள் அதை செய்யக் காரணம் என்னவெனில், அவர்கள் அதைத் தேடும் விதமாக உண்டாக்கப்பட்டிருக்கின்றனர்.

46. இறுதியாக, அது எதில் முடியப் போகிறது, கொலையிலும் தற்கொலையிலும் தான். மனிதன் தன்னுடைய அண்டை வீட்டானின் மனைவியுடன் ஒரு தேதியைக் குறித்துக் கொள்ளும் போது, அல்லது ஏதோவொரு வீட்டை உடைக்கும் போதோ அல்லது ஏதோவொரு ஸ்திரீ பிரிந்து வரும்படி செய்யும் போதோ, தான் ஏதோவொன்றை செய்து கொண்டிருப்பதாக எண்ணிக் கொள்ளுகிறான். நீங்கள் ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்வதாக எண்ணிக் கொள்கிறீர்கள், ஆனால் கடைசியாக நீங்கள் ஒரு துப்பாக்கியை உங்களுடைய தலையின் பக்கத்தில் வைத்து உங்களுடைய மூளையை வெடிக்கச் செய்தோ அல்லது குற்றவாளிகளை தூக்கிலிடுவதற்கான எங்கேயோவுள்ள ஏதோவொரு இடத்திலிருந்து குதிப்பவர்களாகவோ அல்லது விஷம், அபின் அல்லது

ஏதோவொன்றைக் கொண்டு உங்களை நீங்களே சாகடிப்பவர்களாகவோ, மேலும் பரிதாபமான ஒரு நிலைக்குச் சென்று, மரித்து சாத்தானுடைய நரகத்திற்கு போகிறவர்களாகவோ நீங்கள் முடியப் போகிறீர்கள், ஏனெனில் நீங்கள் உண்மையான நிவாரணத்தைப் புறக்கணித்திருக்கிறீர்கள்.

47. நாமோ ஒரு நிவாரணத்தைப் (cure) பெற்றுள்ளோம். கல்வாரி தான் அந்த நிவாரணம். கிறிஸ்துவே நிவாரணமாயிருக்கிறார். அவர் மாத்திரமே நிவாரணமாகவும், ஒரே அஸ்திபாரமாகவும், ஒரே வழியாகவும் இருக்கிறார். நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய காரியங்கள் உள்ளன, அவைகளை வேறு எவ்விடத்திலிருந்தும் உங்களால் பெற்றுக் கொள்ள இயலாது. கிறிஸ்துவே வழியாக இருக்கிறார்; ஒரு வழியல்ல, அதுவே வழி.

சபை அருமையானது தான்; நாம் அவைகளை நேசிக்கிறோம்; ஆனால் சபையானது அந்த வழியல்ல. இயேசுவே வழியாக இருக்கிறார். உங்களுடைய கவலைகளை சபையின் மேல் வைக்க முடியாது, சபையில் இரட்சிப்பு கிடையாது. அது உங்களை இயேசுவை நோக்கி மாத்திரமே சுட்டிக் காட்டுகிறது. அவர் மாத்திரமே இரட்சிப்பாக இருக்கிறார். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். பிதாவிடம் வருவதற்கான ஒரே வழி இயேசு தான். அவர் மாத்திரமே தேற்றரவாளனாக இருக்கிறார், நம்மை எவ்விதம் விசாரிப்பது என்று அறிந்துள்ளவர் அவர் மாத்திரமே, நாம் ஒருவர் மற்றொருவருக்காக கூட கவலைப்பட முடியாது.

**60-03-01 அவர் உங்களை விசாரிக்கிறவர்**

\- - - - - - - - - - - - -

114. நான் சேவை செய்யாவிடில் அவர் என்னை நரகத்திற்கு அனுப்பிவிடுவாரோ என்றெண்ணி நான் கர்த்தருக்கு சேவை செய்வதில்லை; நான் அவரை நேசிப்பதால் அவருக்கு சேவை செய்கிறேன். எனக்குள் ஏதோ ஒன்று இருப்பதால் தான் நான் அவருக்கு சேவை செய்கிறேன். நீங்கள் வெளியில் சென்று, ''எங்கள் சபை இதில் விசுவாசம் இல்லாமலிருப்பதால் நான் இதை விட்டு விடவேண்டியதாயிற்று'' என்று கூறினால் நீங்கள் ஒரு மாய்மாலக்காரனைப் போன்று நடந்து கொள்ளுகிறீர்கள். அது சரி. ஆனால் நீங்கள் அதை நேசிப்பதனால் அதை செய்வீர்களானால், அது தேவனுக்கு ஒரு சேவையாக இருக்குமாயின், உங்கள் இருதயத்தில் ஏதோ ஒன்று தேவனுக்கான உங்கள் அன்பை, இந்த காரியங்களைக் காட்டிலும் அதற்கு மேலாக மிகப்பெருகச் செய்யுமென்றால், இப்பொழுது நீங்கள் சரியான வரிசையில் இருக்கிறீர்கள்.

ஆனாலும் நான் இன்னுமாக மது அருந்தாமலும், புகைபிடிக்காமலும், மெல் லாமலும், சாபமிடாமலும் இருந்தால் கூட இன்னுமாக நான் நரகத்திற்குச் செல்வேன். நிச்சயமாக! நான் எல்லா சபைகளையும் சேர்ந்து, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லா சபைப் புத்தகங்களிலும் என் பெயர் இருந்தாலும், நல்ல வாழ்க்கையை வாழ்ந்திருந்தாலும், ''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்''. அது சரியே!

## 59-06-28E கேள்விகளும் பதில்களும் COD #8 AND #9

---------------

இன்றைக்கு சிறுவரும் சிறுமியரும் ஏதோ ஒரு தொலைக்காட்சி நடிகரின் மேல் பிரியம் வைத்துள்ளனர். அது என்ன? அது வழி உண்டாக்குகிறது. ஒரு பெயர் கெட்ட ஸ்திரீ, இந்த நகரத்திலுள்ள எல்லா

மதுபானக் கடைகளையும் விட அதிகம் பேரை நரகத்திற்கு அனுப்ப முடியும். அது உண்மை.

## 58-09-27 நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல?

-----------------

120 எல்விஸ் பிரஸ்லி எழுதுகிற எல்லா நல்ல பக்தியான பாடல்களும் எத்தனை தொகுதிகளாயிருந்தாலும் நான் கவலைப்படுகிறதில்லை. அவன் இன்னமும் பிசாசினால் பீடிக்கப்பட்டிருக்கிறான். இந்த நாளில் முழு உலகிலும் உள்ள திரைப்படங்கள் அனைத்துமே, எனக்குத் தெரிந்த வகையில் பிள்ளைகளை அவைகள் நரகத்திற்கு அனுப்புகிறதைவிட இவன் அதிகமாக அனுப்பிவிடுகிறான். பேட் பூன், மற்றும் அவர்கள் ஏனையோருமே, அவன் கிறிஸ்துவின் சபையைச் சார்ந்தவன்; எல்விஸ் பிரஸ்லி, ஒரு பெந்தேகோஸ்தேகாரன்; அவர்கள் அந்த

மனித ரூபத்தில் உள்ள யூதாஸ் காரியோத்தாய் இருக்கிறார்கள். அவர்கள் இங்கே தேவனுடைய உன்னத காரியங்களை இங்கே கலக்கும்படியாக பிசாசு அவைகளை இங்கே கொண்டு வர முயற்சித்துக் கொண்டிருக்கிறான். ஜனங்கள் இதை மேல் நோக்கிப் பார்க்கமாட்டார்கள். அவர்கள் இங்கே அப்படியே பார்த்து, "பாருங்கள், அவை யாவும் ஒரே விதமாயுள்ளது" என்று கூறுவார்கள். அது ஒரேவிதமாயிருக்கவில்லை . அந்த தேசத்திலிருந்து வெளியேறுங்கள்.

**58-07-20M விசுவாசத்தினாலே மோசே**

---------------

370 ஞாயிறு காலை இங்கே பிரசங்கிக்கிற ஜிம்மி ஆஸ்பார்ன் அவர்களை இங்கே நோக்கிப் பாருங்கள்; வாரம் முழுவதும் பூகி - வூகி என்று இசைப்பேழையில் ஆராவார இசையை

இசைத்துக்கொண்டும், ராக் அண்டு ரோல் என்ற நடனத்தை ஆடிக்கொண்டும், மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் செய்துகொண்டிருக்கிறார்.

371 எல்விஸ் பிரஸ்லியை நோக்கிப் பாருங்கள், அவர் 1947ம் ஆண்டின் புதிய யூதாஸ் காரியோத்தாயிருக்கிறார். அவன் அசெம்பலீஸ் ஆப் காட் என்ற பெந்தேகோஸ்தே ஸ்தாபன சபையில் பரிசுத்த ஆவிக்காக அந்நிய பாஷைப் பேசி, கடந்த ஐம்பது வருடங்களில் மதுபானக் கடைகள் நரகத்தில் வாதிக்கப்பட அனுப்பிய ஆத்துமாக்களைப் பார்க்கிலும் அதிகமான ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்பிவிட்டான். உலகம் முழுவதும் உள்ள பத்தொன்பது வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகள், சிறு பெண்பிள்ளைகள் தங்களுடைய உள்ளாடைகளை கழற்றி அவனுடைய கையெழுத்தைப் பெற அதனை மேடையின் மேல் எரிகிறார்கள்.

அவனுடைய இடுப்புக் கீழான அவனுடைய மிக இழிவான அங்க அசைவுகளை அவர்கள் தொலைக்காட்சியில் காட்டமாட்டார்கள். அந்நிய பாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கான அத்தாட்சியா? ஓ, சகோதரனே, பரிசுத்த ஆவி அங்கே இருந்தால், அது அந்த விதமாக செயல்படாது. நீங்கள் அதைப் பார்க்கிலும் மேலானதை அறிந்து கொள்வீர்கள். நிச்சயமாக அதைப் போன்று செயல்படாது. தேவன் தூய்மையையும், துப்புரவையும், பரிசுத்தத்தையும் நேசிக்கிறார்.

**57-09-08E எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2**

---------------

355 அது உங்களுடைய இருதயத்தில் என்ன வித்து விதைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பொருத்ததாயிருக்கிறது. நீ நரகத்தைக் குறித்துப் பயப்படுகின்ற

காரணத்தால் சபைக்கு வருவாயானால், நீ நரகத்திற்கு செல்ல விரும்பாத காரணத்தால்நீ நரகத்திற்கு செல்ல விரும்பாததால் சபையைச் சேர்ந்து கொள்வாயானால், நீ இன்னமும் ஒரு களையாயிருக்கிறாய். நீங்கள் நீங்கள் புகழ்பெற்றவராயிருக்க வேண்டும் என்பதற்காக சபையைச் சேர்ந்து கொள்வீர்களேயானால், நீங்கள் இன்னமும் ஒரு களையாயிருக்கிறீர்கள். நீங்கள் செய்யப்பட வேண்டிய இந்த எல்லா சடங்காச்சாரக் காரியங்களையும் செய்திருப்பீர்களேயானால், அவையாவற்றையும் நீங்கள் பெற்றிருப்பீர்களேயானால், அப்பொழுது நீங்கள் இன்னமும் ஒரு களையாகவே இருக்கிறீர்கள்.

356 ஆனால் ஒரு உண்மையான, அசலான கிறிஸ்தவன் உலகம் மரித்ததாகி, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாகும்வரை பூரணமாகுதலை

நோக்கித் தொடருகிறான். அப்படியானால் அந்த மனிதன் எப்பொழுதுமே விழுந்து போவது கூடாத காரியமாயுள்ளது. வேதம் என்னக் கூறியுள்ளது! அது எப்படி மற்ற வேதவாக்கியங்களோடு ஒப்பிடப்படுகிறது என்பதைப் பார்த்தீர்களா? அது எப்படி அங்கே சரியாக அதனுடைய ஸ்தானத்தில் போடப்படுகிறது என்பதைப் பார்த்தீர்களா?

**57-09-08E எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2**

-----------------

நான் நரகத்திற்கு செல்லப் போகிறேன் என்று பயப்படுகிற காரணத்தால், நான் கர்த்தருக்கு ஊழியம் செய்தால், அப்பொழுது நான் அவருக்கு சரியாக ஊழியம் செய்துகொண்டிருக்கவில்லை. என் மனைவி என்னை விவாகரத்து செய்துவிடுவாள் என்று நான் பயப்படுகிறதினால் நான் அவளுக்கு உண்மையாக ஜீவித்தால், அப்பொழுது

நான் ஒரு நல்ல கணவனாக இருக்கவில்லை. ஆனால் நான் அவளை நேசிக்கின்றபடியால், நான் எந்த காரியத்திற்காகவும் அவளைப் புண்படுத்தமாட்டேன்.

## 57-09-08E எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2

-----------------

199 ஸ்தோத்தரிக்கப்பட்ட கர்த்தாவே, நித்தியம் மாத்திரமே நாங்கள் இப்பொழுது ஒன்று சேர்ந்து பகிர்ந்து கொள்கிற மகத்தான காரியங்களை வெளிப்படுத்தும். சிறிய... அநேகர்

ஆக்கினைத்தீர்ப்புக்கென்று நியமிக்கப்பட்டிருக்கின்றனர். யூதா புத்தகத்தில் நீர் கூறியிருப்பதுபோல, "நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று

பூர்வத்திலே எழுதியிருக்கிறது." இன்றைக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டிருக்கிற அநேகர் தேவனுடைய கிருபையை ஒரு பணம் சம்பாதிக்கும் திட்டத்திற்குள்ளாகப் புரட்டி, மிகப்பெரிய ஒரு சபையையும், பெரும்பாலும் ஞாயிறு வேதபாடபள்ளியையும் உடையவர்களாய், தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டுகிறார்கள். உலகமோ குருடாய், குருடான பன்றிகளைப் போல போய்க்கொண்டிருக்கிறது. அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

200 ஓ தேவனே, எங்களுடைய புரிந்து கொள்ளுதலை பெற்றுக்கொள்ளும்படி எங்களுடைய மனதைத் திறந்தருளும். எங்களுடைய புரிந்துகொள்ளுதல் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளைப் போன்றதாயில்லாதிருப்பதாக. ஏனென்றால் நீர் உம்முடைய வார்த்தையில், "இவ்விதமாய் ஒளியின்

பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறீர். ஆதியில் அவ்வண்ணமாய் இருந்தது, காயீனின் புத்திரர்கள் மிகப்பெரிய புத்தியுள்ள விஞ்ஞானிகளானார்கள். அவர்கள் பெரிய கல்வியாளர்களானார்கள். அவர்கள் மூலப்பொருட்களின் தொழிலாளர்களானார்கள். அவர்கள் செழித்தோங்கி, மிகவும் பக்தியுள்ளவர்களானர்கள், ஆனால் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு, நியாயத்தீர்ப்பில் அமிழ்ந்து, அழிந்துபோயினர். அவர்களுடைய பிரதேங்கள் தண்ணீரில் மிதந்தன. அவர்களுடைய ஆத்துமாக்களோ நரகத்திற்கு சென்றன.

201 இயேசுவானவர் மரித்த போது, அவர் சென்று அவர்களிடத்தில் பேசினார்.

வேதமோ, “அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்படியாமற்போனவைகள்” என்று உரைக்கிறது. தேவன், அவர் பூமியின் மேலிருந்தபோது, அவர், “நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்” என்றார்.

**57-09-01M எபிரெயர், மூன்றாம் அதிகாரம்**

---------------

77. ஓ, சகோதரனே, எப்போதாவது அவமானம் என்ற ஒன்று இருந்திருக்குமானால் அது இதுவேயாகும்! அதைப் போன்ற ஒரு நபருக்கு ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைக் குள்ளாகச் செல்ல வேண்டிய வேலையே கிடையாதே.

நீங்கள் இந்த நபரை பள்ளத்தாக்குகளில் வாழ்ந்தப் பழங்காலத்தவரைப் போன்ற அரை குறை ஆடையோடு நடனம் புரிய கொண்டு சென்று, முழு இரவும் பண்டைய மாதிரியான நடனம் ஆடிவிட்டு, அந்த பண்டைய மாதிரியான நடன நிகழ்ச்சி நடந்து கொண்டிருக் கையில் மற்றவர் தங்களுடைய கரங்களை தட்டி ஆர்ப்பரிக்கச் செய்கின்றீர்கள். அடுத்தநாள் காலையிலோ அவன் தன்னுடைய குரலை மாற்றிக் கொண்டு, ஒரு கிறிஸ்தவனைப் போல பேசுகிறான். ஏன், அது தேவனுடைய பார்வையில் இழிவான தாயும், அசுத்தமானதாயும் இருக்கிறது."

78. இந்த நியாயத்தீர்ப்பின் கோலை அசைவாட்டும் கரமானது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலும், வல்லமையினா லும் சுத்திகரிக்கப்பட வேண்டும். அப்படியில்லாதவனுக்கு தேவனுடைய வார்த்தையை கையாள எந்தவிதமான உறவும் கிடையாது. ஏராளமான

பிரசங்கிமார்களும்கூட இந்த எல்விஸ் பிரஸ்லியை நீதிமானாக்க முயற்சிக்கின்றனர். அவன் இந்த உலகத்தில் ஒரு நவநாகரீக யூதாஸ்காரியோத்தேயல்லாமல் வேறொன்றுமில்லை. யூதாஸ்காரியோத்து முப்பது வெள்ளிக் காசுகளைப் பெற்றுக் கொண்டான். எல்விஸ் பிரஸ்லியோ இலட்சக்கணக்கான டாலர்களையும், எளிதில் விரைவாக இயங்கும் காடில்லாக் கார்களையும் பெற்றுக் கொண்டான். ஆனால் அவன் விற்றுப்போட்டான். அவன் ஒரு பெந்தெகோஸ்தே விசுவாசி யாயிருந்து தன்னுடைய பிறப்புரிமைகளை சுழன்று-உருண்டு ஆடும் நடன இசைக்காக பிசாசினால் ஏவப்பட்டு விற்றுப்போட்டு விட்டான். நான் அதன்பேரிலான வெளிப்படையான உண்மை களைக் கூறப் பயப்படுவதில்லை. இல்லை ஐயா, ஒரு நவநாகரீக யூதாஸ்காரியோத்து.

79. ஆகையால் ஊழியக்காரர்களும்கூட அந்தவிதமான ஒரு காரியத்தை ஆதரித்து வளர்த்து உருவாக்க முயற்சிக் கிறார்கள். எல்விஸ் பிரஸ்லியோ, ஆம், ''என்னுடைய எல்லா வெற்றிக்காகவும் நான் தேவனையே நம்புகிறேன்" என்கிறான். எப்படி ஒரு ஜீவனுள்ள, பரிசுத்தமான தேவன் இழிவாய், ஒரு பிசாசாய், பேய்த்தனமாக்கப்பட்டுள்ள ஒரு காரியத்திற்கு வெற்றியை அளிப்பார்?

80. இலட்சக்கணக்கான ஆத்துமாக்களை தன்னுடைய பழைய மட்டரகமான, அசுத்தமான சுழன்று - உருண்டு ஆடும் நடன இசைக் காரியத்தினால் நரகத்திற்கு அனுப்பியிருக்கிற எல்விஸ் பிரஸ்லியைப்போன்ற ஒரு நபரே இந்த தேசம் எப்போதும் கண்டிருக்கிற முற்றிலுமான மிகப்பெரிய இடர்களில் ஒன்றாய் இருந்து வருகிறான்.

நிச்சயமாகவே அதற்கு என்னிடத்தில் எந்த மன்னிப்பும் கிடையவே கிடையாது. உங்களால் என்னை தேவனுடைய தீர்க்கதரிசி என்று விசுவாசிக்க முடியுமானால், அப்பொழுது அது மாம்ச உருவில் குடி கொண்டுள்ள ஒரு பிசாசாய் உள்ளது என்பது நினைவிலிருக்கட்டும். முற்றிலுமாக.

81. விம்மி ஆஸ்பார்ன் மற்றும் அதைப் போன்றவர்களுக்கு தேவனுடைய வார்த்தையோடு எவ்வித தொடர்பும் கிடையாது

- 'மனிதனுமே தேவனுடைய நாமத்தை வீணாக எடுத்துக்கொண்டு களியாட்டங்களிலும், கழன்று-உருண்டு ஆடும் நடன இசைகளிலும் இழிவான காரியங்களிலும் பங்கு கொண்டு பின்னர் எந்த ஒரு பிரசங்க பீடத்திற்கும் வந்து தேவனுடைய எடுத்துக்கூற ஒருபோதும் முயற்சிக்கவே கூடாது.

32 இன்றைக்கு அனேக சபைகளில் உள்ள காரியம் அதுவேயாகும். நீங்கள் இங்குள்ள இந்த ஸ்தலங்களில் இருந்து பண்டைய பூகி- வூகி என்ற இசையை பயின்று பாடுபவர்களில் 'சிலரையே உடையவர்களாயிருக்கிறார்கள். ஒர் இரவு வெளியே நடனக்களிப்பிலும், இங்குள்ள இந்த எல்லா ஆடிப்பாடி உருளும் நடனங்களை ஆடும் ஒரு பெண், அவள் பிடத்தண்டை வர அடுத்தநாள் நீங்களோ அவளை ஒரு விசேஷித்த பாடலை பாட அனுமதிக்கிறீர்கள். உங்களில்

சிலர் ஓர் இரவு நேர களியாட்ட விருந்து சங்கத்தில், அந்த இடங்களில் யாழ் வகையான ஆறு நரம்புகளை கொண்ட சிறு வீணையை வாசிப்பவர்களை கொண்டு இரண்டே வாரங்களில் பிரசங்க பீடத்தில் அவர்களை பிரசங்கிக்க வைக்கிறீர்கள்.

83, சகோதரனே. அவன் இங்கே ஒருபோதும் அதை செய்யவே கூடாது என்று நான் உங்களுக்கு சொல்கிறேன் உண்மையாகவே செய்யக்கூடாது. அவள் தன்னை தேவனுடைய மனிதனாக நிரூபிக்கும்படி ஆய்ந்து படித்து கண்டறியப்பட வேண்டும். இங்கே ஓர் இரவில் இந்த விதமாக குதிப்பதில் நாங்கள் நம்பிக்கை கொள்வதில்லை. இன்றைக்கு சபையானது பெற்றுள்ள நிலைமையே அதுவாகத்தான் உள்ளது

34. நமக்கு தேவை சத்தியமே, இந்த இந்த சத்தியமாயிருக்கிறது. அது உண்மை . இந்த நியாய தீர்ப்புக்கோலை அசைவாட்டுகிற கரமானது ஒரு சுத்தமான கரமாய் இருக்க வேண்டும், முற்றிலுமாக.

85. மோசேயினுடைய அந்த நியாயத்தீர்ப்பின் கரமானது சுத்திகரிக்கப்பட்டு, அதன் பின்னரே அந்தக் கோலானது அதில் வைக்கப்பட்டது.

அப்பொழுது அந்த கோல் சென்று இஸ்ரவேலரின் மேல் நியாய தீர்ப்புகளை கொண்டு வந்தது

## 57-04-14 கொரிந்தியர், திருத்துதலைக் கொண்ட புத்தகம்

---------------

92. இன்றைக்கு நாம் எதனால் அசைக்கப்பட்டிருக்கிறோம்? நினைவிருக்கட்டும், நான் இதை முன்னறிவிக்கிறேன். அதாவது அமெரிக்கா ஒரு ஸ்திரீயை நேசிப்பவளாக இருக்கிறது. அவள் ஒரு ஸ்திரீயை ஆராதிப்பவளாய் இருக்கிறாள். அமெரிக்காவில் இருக்கிற ஆவி முற்றிலுமாக ஸ்திரீயினால் ஆண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒன்று சேர்ந்து கூச்சலிடும் எல்லா மது அருந்தும் அறைகளும், மனிதர்களை நரகத்திற்கு அனுப்ப முடிந்ததை விட ஹாலிவுட்டிலிருந்து வெளிவந்த இந்த

சிறிய ஸ்திரீகள் வீதியில் நடந்து அதிகமான மனிதர்களை நரகத்திற்கு அனுப்ப முடியும்.

## 57-01-20E தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்

-------------------

111. பாவியைக் குற்றப்படுத்தாதே; அவன் மீது இரக்கங் கொள்ளுங்கள். அவன் இன்னுமாக தன்னுடைய குழாயில் புகை பிடிக்கட்டும், தன்னுடைய மதுவை அவன் குடிக்கட்டும், தன்னுடைய சீட்டாட்ட விருந்தை அவன் கொண்டிருக்க விட்டு விடுங்கள். அது அவனுடைய இன்பமாயிருக்கிறது. அவனை பழிக்காதீர்கள். அவன் மிகவும் களைப்புற்று, சோர்வடைந்து வீட்டுக்கு வருகையில், ஏதோ ஒரு இன்பம் அவனுக்கு தேவைப் படுகிறது. நீயோ செய்ய வேண்டியது என்னவெனில், அதை விட சுவிசேஷமானது பத்தாயிரம் மடங்குகள் அளிக்கின்றது என்பதை

உன்னுடைய ஆழ்ந்த தேவ ஜீவியத்தைக் கொண்டு அவனுக்கு நிரூபிக்க வேண்டும் (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி) அவன் அந்நிலையில் மரிப்பானானால், தன்னுடைய மதுவில், அவன் நரகத்திற்கு செல்வான். அது தான் பிசாசின் மட்டு மீறிய கிளர்ச்சி போதையாகும். அவன் தன்னுடைய சிகரெட்டு குழாயை இழுத்துக் கொண்டே இருந்து மரித்து போவானானால், தேவன் அவனுடைய நியாயாதிபதியாக இருக்கிறார். அவன் அங்கே வெளியே சென்று, நடனமாடி, ஒழுக்கங்கெட்ட ஆடைகளை அணிந்தவனாக இருந்து மரிப்பானானால், தேவன் அவனுடைய நியாயாதிபதியாக இருக்கிறார்.

112. ஆனால் ஒரு காரியம் இருக்கின்றது, மேலே தேவனை நோக்கிப் பார்த்து, ''வானங்கள் திறந்திருக்கிறதையும் வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் நான் காண்கிறேன்'' என்று

கூறின ஸ்தேவானைப் போல் பரிசுத்த ஆவியின் அபிஷே கிக்கும் வல்லமையின் கீழ் நீங்கள் மரிப்பீர்களானால், ஒரு தூக்கணாங் குருவி தன்னுடைய கூட்டிற்கு செல்வது போல, நீங்களும் பரலோகத்தை நோக்கிச் செல்கிறீர்கள். ஆமென்.

## 55-07-24 மயக்கியிழுக்கும் ஆவிகள் #3

-------------

116. இப்பொழுது, இன்றிரவு நான் ஸ்திரீகளைக் குறித்து பேச நிச்சயப் படுகிறேன். ஆனால் பாருங்கள், உலகமானது ஸ்திரீயை வழிபடுகிறது, ஆனால் ஆதியிலிருந்தே ஸ்திரீயானவள் சாத்தானுடைய கருவியாக இருக்கின்றாள். இன்றைக்கு நல் ஒழுக்கம் குன்றிய ஒன்றைத்தான் அவன் சிறந்த கருவியாகப் பெற்றிருக்கிறான். அங்கே உலகத்தில் உள்ள எல்லா திருட்டு வியாபாரக் குழுக்களைக் காட்டிலும் இன்னும் அதிகமான பிரசங் கிகளை அவள்தான்

நரகத்திற்கு அனுப்பிவிடுவாள். ஒரு துடுக்கான பெண் தன் வாயின் முனையில் ஒரு சிகரெட்டை வைத்துக் கொண்டு, அதைப் போன்று மயிரை வெட்டிக் கொண்டு, நீண்ட பெரிய கண் மையிட்டுக் கொண்டு மேலும் கீழுமாக கண்ணடித்துக் கொண்டு, சகோதரனே, ஒரு சிறிய ... அழகாகக் காணப்படுகின்ற உடலமைப்பைப் பெற்றிருப்பாளானால், அவள் என்ன செய்வாள் என்பதைக் கவனியுங்கள்.

117. பிரசங்கியே, நீ இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மூடிக் கொள் வாயனால் நலமாயிருக்கும். அது சரி. நான் ஒரு மனிதன் என்று, இப் பொழுது நீ எனக்கு ஒன்றும் கூறாதே, நான் அதைக் குறித்து நிறையவே பார்த்து விட்டேன். இப்பொழுது, இங்கே கவனியுங்கள்; உங்கள் சிந் தையை இயேசு கிறிஸ்துவின் மேல் மையம் கொள்ளச்செய்து, உங்கள் சிந்தனையை தூய்மையாக

வைத்திருப்பதுதான் நீங்கள் செய்ய வேண்டிய சிறந்த காரியம் ஆகும்.

## 53-07-29 கேள்விகளும் பதில்களும் COD #1

-----------------

215. இதை கவனியுங்கள், அவன் பெருத்த வெற்றியடைந்தான் என்று நாம் காண்கிறோம். அவன் வெற்றி மேல் வெற்றியடைந்து, முடிவில் ''எனக்கு இவ்வளவு இருக்கிறது'' என்றான். அவன் அந்நாளில் உண் மையான வாலிபனாகத் திகழ்ந்தான். இல்லையா? ''என் களஞ்சியங்கள் நிறைந்து வெடிக்கின்றன. எனக்கு இவ்வளவு சேர்ந்து விட்டது. 'ஓ, ஆத்துமாவே, இளைப்பாறு, என்பேன்'' என்றான்.

216. ஆனால் அவன் தொடக்கத்தில் என்ன செய்தான்? இயேசு கிறிஸ்துவின் வழிநடத்துதலைப் புறக்கணித்தான். அவனுடைய சபை, அவனுடைய அறிவு, அவனுடைய கல்வி இவையனைத்துமே

அவனை வெற்றிக்கு வழி நடத்தியது. யூதர்கள் அனைவரும் அவனை நேசித்தனர். அவன் அவர்களுக்கு அள்ளிக் கொடுத்தான், அவர்களுக்குதவி செய்தான். அவன் இதை, அதை மற்றதை செய்திருக்கலாம். ஆனால் பாருங்கள், அவன் நித்திய ஜீவனாகிய இயேசு கிறிஸ்துவின் வழி நடத்து தலைப் புறக்கணித்தான். வேதம் இவ்வாறு கூறுகிறது: ''தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்'' என்றார். (லூக்.12:20)

217. பிறகு அவனை நாம் நரகத்தில் காண்கிறோம் (அடுத்த இடம்). அவன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, அவன் தெருவில் விரட்டியடித்த தரித்திரனாகிய லாசருவை ஆபிரகாமின் மடியில் காண்கிறான். அது எத்தகைய மரணத்துக்கேதுவான தவறு! சபைகள்,

தாங்கள் போகும் வழியில் சரியாகப் போய்க் கொண்டிருந்தன. ஆயினும் அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கவில்லை.

**65-12-07 வழி நடத்தும் தன்மை**

---------------